விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 30 வெள்ளிக்கிழமை (16.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

## அரசாங்கத்துக்கான ஆதரவினை ஹெலஉறுமய விலக்கிக் கொள்ளாது

### எல்லாவல மேதானந்த தேரர் உறுதி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசுக்கான ஆதரவை ஜாதிக ஹெலஉறுமய விலக்கிக் கொள்ளாது என்று அக் கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இது குறித்து அவர் கூறியதாவது,

எதிரணியுடன் இணையுமாறு எமது கட்சி உறுப்பினர்களுக்கு இரகசிய அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன. பணத்திற்காக நாம் யாருடனும் புதிதாகக் கூட்டுச் சேரப் போவதில்லை. பணத்துக்காக நாம் துரோகம் செய்யப் போவதில்லை.

எனவே நாம் மகிந்த அரசாங்கத்துடனேயே இருப்போம். புலிகளை அழிப்பதற்கு அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவு இருக்கும். அதற்காக மகிந்தவுக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ நாம் பந்தம் பிடிக்கவில்லை. (08 ஆம் பக்கம் பார்க்க)

## சி.சு.கட்சி மத்திய குழுவிலிருந்து பிரதி நீதியமைச்சர் டிலான் விலகல்

### ஐ.தே.க. எம்.பியின் கட்சித் தாவலையடுத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிலிருந்து விலகுவதாகப் பிரதி நீதியமைச்சர் டிலான் பெரேரா நேற்று அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த மகிந்த ரட்ண திலக்கவை ஆளுந்தரப்புக்குள் இணைத்துக் கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தான் பதவிவிலகியிருப்பதாக மகிந்த ராஜபக்ஷவுக்கு அவர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

தனது விலகல் குறித்து அவர் மேலும் கூறியதாவது,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுதான் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியது. கட்சித் தலைவர் என்ற ரீதியில் கட்சி குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு; அதிகாரம் இருக்கின்றது.

ஆனால் (08 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசியலில் பெருங்குழப்பம்

# அனைத்துக் கட்சிகளும் உடையும் நிலை

## தமிழ்க் கூட்டமைப்பு இன்று ஆலோசனை


(கொழும்பு)

இலங்கை அரசியலில் பெருங்குழப்பம் ஏற்பட்டுள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளும் உடையும் நிலை ஏற்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தமது வரவு-செலவுத் திட்ட அறிக்கையை நாடாளுமன்றில் நிறைவேற்ற ஜே.வி.பி. ஆதரவளிக்காது என்கின்ற சூழல் வெளிப்பட்ட நிலையில் நேற்று முதலே கொழும்பு அரசியல்களம் பாரிய சூடு பிடிக்கத் தொடங்கி உள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துடன் இணையும் எண்ணம் எதுவும் இல்லை

### மகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)



எந்தக் காரணத்துக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வேறு எந்தக் கட்சிக்கும் செல்லமாட்டேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் அரசுடன் இணையவுள்ளதாக நேற்று பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் (08 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத்தைக் கலைப்பேன்

## முஸ்லிம் இளைஞர்கள் ஐவரைக் காணவில்லை

# நாடாளுமன்றத்தைக் கலைப்பேன் ஜே.வி.பிக்கு ஜனாதிபதி எச்சரிக்கை



(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் சுதந்திரக் கட்சியின் அனைத்து அமைச்சர்களுடனும் நேற்று முன்தினம் இரவு மகிந்த ராஜபக்ஷ நீண்ட ஆலோசனை நடத்தினார்.

வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்க ஜே. வி.பியினர் விதித்திருந்த நிபந்தனைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக ஜே.வி.பியினருக்கு எச்சரிக்கைக் கடிதத்தை மகிந்த ராஜபக்ஷ அனுப்பியதாகத் தெரிகின்றது.

ஜே.வி.பியினர் கடந்த காலங்களில் முன்வைத்த பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியிருப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ, தற்போது ஏற்க முடியாத நிபந்தனைகளை முன்வைத்து வரவு-செலவுத் திட்ட நேரத்தில் அரசை (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐவரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் ஐந்து பேரும் ஓட்டமாவடி எல்லை வீதியில் கதைத்துக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென காணாமல் போயுள்ளனர். இவர்கள் அவ் விடத்தில் கதைத்துக் கொண்டிருக்கும் வேளையில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

ஓட்டமாவடி, (08 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் தரையிறங்கிய உலங்குவானூர்தியால் பீதி

(மன்னார்)

உலங்கு வானூர்திகள் தொடரணியில் வந்த உலங்கு வானூர்தி ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக மன்னாரில் தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

உலங்கு வானூர்திகள் நான்கு தொடரணியாக நேற்றுப் பிற்பகல் பறப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அப்போது தாழ்வுப்பாடுக்கு அருகாமையில் உலங்குவானூர்தி ஒன்று கோளாறுக்கு உள்ளானதாகவும் அது அங்கு தரையிறக்க ஏனையவை அப் பகுதி மீது வட்டமிட்டுக் கொண்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகினர். மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவில்லை. அப் பகுதிக்குப் பெருமளவு இராணுவத்தினர் நகர்த்தப்பட்டனர்.

படையினர் அங்கு குவிக்கப்பட்ட பின்னர்தான் மூன்று உலங்கு வானூர்திகளும் மன்னார் படைத் (08 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா, முகமாலையில் மோதல் படை வீரர் பலி; ஐவர் படுகாயம்

(கொழும்பு)

வவுனியா மற்றும் முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் நேற்று முன்தினம் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் படைவீரர் ஒருவர் பலியானதுடன் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதன்போது 14 புலிகள் கொல்லப்பட்டுள்ளதுடன் 24 பேர் காயமடைந்துள்ளனர் என்று படைததரப்பினர் தெரிவித்தனர்.

கள்ளிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் இடம்பெற்ற மோதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார். இதன்போது புலிகள் தரப்பில் ஒருவர் பலியானதாக படையினர் கூறினர்.

கன்னடிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் படையினர் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேபோன்று நரிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10.40 மணியளவில் இடம்பெற்ற (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடக்கு கிழக்கில் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கான நிதி அதிகரிப்பு

## அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தகவல்

(கொழும்பு)

மோதல்கள் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் முற்றாகச் சேதமடைந்த வீடுகளை புனரமைக்கும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ், முற்றாகச் சேதமடைந்த வீடொன்றுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவான 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான பிரேரணையை முன்வைத்திருந்தார் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்சனயாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

மோதல்கள் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் சேதமடைந்த வீடுகளை புனரமைக்கும் நான்கு ஆண்டுகளுக்கான திட்டம் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள 8 மாவட்டங்களிலும் சேதமடைந்துள்ள 34 ஆயிரத்து 784 வீடுகளை புனரமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எனினும் நிதிப் பற்றாக்குறை நிலவுவதால் சேதமடைந்துள்ள வீடுகளில் 12 வீதத்தைக் கூட புனரமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இத்திட்டத்திற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. இலங்கையின் சார்பில் 2 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது.

ஐரோப்பிய யூனியன் 15 மில்லியன் யூரோக்களை வழங்கியது. எனினும் கடந்த 2 வருடங்களில் கட்டடப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதனால் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி இத்திட்டத்தினை நிறைவேற்ற முடியாமல் உள்ள தால் மேலதிக நிதியை ஒதுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளோரால் யாழ்.நீதிவானுக்கு கடிதம் அனுப்பி வைப்பு

## உயர் அதிகாரிகளைச் சந்திக்க வசதி செய்து தருமாறு கோரி

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தலால் சரணடைந்து நீதிமன்ற பாதுகாப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளோர், தமது பிரச்சினை தொடர்பாக உரியவர் களை சந்திக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி யாழ். மாவட்ட நீதிவானுக்கு, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகரூடாக கடிதம் ஒன்றை ஒப்படைத்துள்ளனர். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.சிறைச்சாலையில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்தவர்களில் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனத் பணியாளர்கள் என பலர் உள்ளனர்.

சிறைச்சாலையில் சுகாதார வசதியின்மை காரணமாக பல கொடிய நோய்களுக்கு உள்ளாகி வருவதுடன் நாங்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகி இருக்கின்றோம். ஆகையால் எங்களுடைய நிலைப்பாட்டை எந்த பொது அமைப்புக்களோ எடுத்துக் கூறுவதாக இல்லை.

அத்துடன் எமது விடுதலைக்காக நாம் அனைவரும் ஏங்கி நிற்கும் இவ்வேளையில் வடமாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற தமிழ்க் கூட்டமைப்பினர், ஐ.தே.க கட்சி எம்.பி தி.மகேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் மற்றும் மனித உரிமைக் குழுவின் பிரதிநிதிகள், மக்கள் கண்காணிப்புக்குழுவினர், ஐ.சி.ஆர்.சி, மத சார்பான அமைப்புக்களையும், புனர்வாழ்வு ஆணையாளர் ஆகியோரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் நாங்கள் அனைவரும் எமது விடுதலை கருதி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக நீதிமன்றத்தினூடாக சந்திக்க விரும்புகின்றோம்.

ஏனெனில் எமது குடும்பங்கள் சீரழிந்து செல்கின்றன. மாணவர்களின் கல்வி நிலைகள் சீரழிந்து போவதுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரிவோருடைய பணிகள் பாதிப்புக்குள்ளாகின்றன.

ஆகையால் எங்கள் அனைவரின் வேண்டுகோள்களை ஏற்று சகல தரப்பினரையும் சந்திப்பதற்கான ஒழுங்குகளை நீதிமன்றினூடாக மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அவ்வாறு தவறும் பட்சத்தில் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் நாம் 30 ஆம் திகதிக்கு பின்னர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

இதற்கான ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்து நீதிமன்றப் பாதுகாப்பில் யாழ்.சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளோர், மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகளை சந்திக்குமாறு கோரி சிறைச்சாலை அத்தியட்சகரூடாக கடிதமூலம் கோரியதையடுத்து நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரியுடன் அதன் பிரதிநிதிகள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர். (ச-4)

# நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளோரின் கோரிக்கைக்கு நீதிவான் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றப் பாதுகாப்பில் யாழ். சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளோரால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் மற்றும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளோரை இவ்வாரத்திற்குள் புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக நீதியமைச்சின் செயலாளரும் புனர்வாழ்வு ஆணையாளருமான சுகத் கம்லத் உறுதியளித்துள்ளார். (ச-5)

# ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் 4 பேர் கைது

(கொழும்பு)

இராஜகிரியப் பகுதியில் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் 4 பேரை வெலிக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 5 மணியளவில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருக்கையில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த வெலிக்கடைப் பொலிஸார் இவர்களை கைது செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 4 பேரும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# பிரித்தானியாவில் புலிகள் மீதான தடை உடனடியாக மீளப்பெறும் சாத்தியம் இல்லை

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானிய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக மீளப்பெறும் வாய்ப்பு குறைவாக உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் தனது லண்டன் பயணத்தை முடித்து நாடு திரும்பிய பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

பிரித்தானிய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக மீளப்பெறும் வாய்ப்பு குறைவாக உள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

சு.ப.தமிழ்ச்செல்வனின் வணக்க நிகழ்வில் பிரித்தானியாவில் பங்கேற்றவர்களுக்கு எதிராக இலங்கை சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சாத்தியமான விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# அர்ஜுனவும் கட்சி தாவலாம்?

(கொழும்பு)

அரசின் வரவு செலவுத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களில் ஒருவருமான அர்ஜுன ரணதுங்கவும் எதிரணிக்கு மாறலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து அர்ஜுனவை அவசரமாக நேற்று முன்தினம் அலரி மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவருடன் பேச்சு நடத்தியுள்ளார். அரசின் வரவு செலவுத்திட்டத்திற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளு மன்றில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# புங்குடுதீவில் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழகத்தினால் (ஊர்காவற்றுறை) நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணியளவில் யாழ்./ புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

நீரிழிவு, சருமநோய், இரத்த அழுத்தம், டெங்கு, சிக்குன்குனியா போன்றவற்றிற்கான விழிப்புக் கருத்தரங்கும் பரிசோதனைகளும்; பார்வைக் குறைபாடு; குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர்களுக்குமான பரிசோதனைகளும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும வைத்திய நிபுணர்களால் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள், சத்துணவுகள், கண்ணாடிகள் வழங்கப்படும்.

மேலும் தலைமைத்துவப் பயிற்சி, மலேரியாத் தடுப்பு, மரம் நடுகை போன்ற நிகழ்வுகளும் அங்கு நடைபெறவுள்ளன. இதில் சகல மக்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

# யம சங்காரம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தானத்தில் இன்று ஐப்பசி மாத இறுதி வெள்ளிக்கிழமை பகல் விஷேச அபிஷேகம், பூஜை, அர்ச்சனை நடைபெற்று மாலை 3.00 மணிக்கு யம சங்காரமும் இடம்பெறும். (ச-6)

# ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய், வவுனியா வடக்கு, கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த தற்காலிக இணைப்புப் பெற்ற, இணைப்புப் பெறாத ஆசிரியர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 25 ஆம் திகதிக்கு முன் ஏப்ரல், மே மாதங்களுக்குரிய வேதனங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை, ஆவரங்கால் சைவ மகாஜன வித்தியாலயம், திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. பொருத்தமானவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# தமிழ்த்தினப் போட்டிகள்

(அல்வாய்)

பருத்தித்துறை கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டிகள் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-19)

# பாடசாலை மட்ட பயிற்சிப் பட்டறை

தேச நிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன், உலக உணவுத் திட்டத்தில் கல்விக்கான உணவு, பாடசாலை மட்டப் பயிற்சிப் பட்டறை நடைபெற உள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறையின் பயிற்றுநர்களுக்கான கலந்துரையாடல்களுக்கமைய எதிர்வரும் 19,20,21,22 ஆம் திகதிகளில் வலிகாமம் வலயத்திலும்; 23,24 ஆம் திகதிகளில் தீவக வலயத்திலும்; 28,29,30 ஆம் திகதிகளில் யாழ்.வலயத்திலும்; 29,30ஆம் திகதிகளில் வடமராட்சி வலயத்திலும்; டிசம்பர் 3 ஆம் 4ஆம் திகதிகளில் தென்மராட்சி வலயத்திலும் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (அ-19)

# சைவநெறி பாடசாலை செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணக் கோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான தரம் 07,11 சைவநெறி பாட செயலமர்வு எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு நாளை நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கந்தசஷ்டி விரத பூர்த்தியை முன்னிட்ட பாறணை அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கந்தசஷ்டி விரதம் அநுஷ்டித்தவர்களுக்கான பாறணை அன்னதானம் இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

இதேவேளை வழமையாக மண்டபத்தில் வெள்ளிதோறும் நடைபெறும் அன்னதானம் வழமைபோல் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும். (ச-6)

# இலங்கை வங்கியின் புலமைப் பரிசில்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை 2007 இல் 180 புள்ளிகளுக்கு மேல் அல்லது மாவட்டத்தில் முதல் 10 நிலைக்குள் வந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க இலங்கை வங்கி முடிவு செய்துள்ளது.

இம்மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சை நடந்த தினமாக கடந்த 19.08.2007 அன்று முதல் இலங்கைவங்கியின் சிறுவர் சேமிப்புக்கணக்கில் 2ஆயிரத்து 500 ரூபாவை வைத்திருக்க வேண்டும்.

தகுதியுள்ளவர்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கும்படி வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச)

# இன்று ஒரு தகவல்

## இல்லறத் துறவி

''இல்லற வாழ்க்கை போரடிக்கிறது சார்! பேசாமல் துறவி ஆகிவிடலாமா என்று பார்க்கிறேன்'' என்றார் ஒருவர். ''ஆக வேண்டியதுதானே!'' என்றேன். அதுதான் பார்க்கிறேன். ஆனால் சம்சாரமும் பிள்ளை குட்டிகளும் விடமாட்டேன் என்கிறார்கள். அதுதான் இடைஞ்சலாக இருக்கிறது என்றார்.

துறவு என்றால் காவி வேட்டியைக் கட்டிக்கொண்டு, தாடியை நீளமாக வளர்த்துக்கொண்டு காடு எங்கே இருக்கிறது என்று தேடிப் போய் உட்கார்ந்து கொள்வது என்றுதான் இவரைப் போல பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது ரொம்பத் தப்பு. துறவியாகப் போவதென்பது ஒரேயடியாக சாமியாராகப் போவது அல்ல. அது வேறு மாதிரி இல்லறத்தில் இருந்து கொண்டே துறவியாக இருக்க முடியும். அப்படி முடியும் என்பதை நிரூபித்துக் காட்ட அந்தக் காலத்திலே ஒருவர் இருந்தார். அவர் வேறு யாருமில்லை. சீதாதேவியின் தகப்பனார் ஜனகர்!

இதை மிதிலா நகரிலே இருந்த முனிவர்கள் நம்பவில்லை ஜனகர் மீது அவர்களுக்கெல்லாம் சந்தேகம். அது எப்படி? இவர் ராஜ போகங்களின் மத்தியில் சுகமாக இருப்பவர். இவர் எப்படித்துறவியாக முடியும்? என்று பேச ஆரம்பித்தார்கள். இது ஜனகர் காதிலும் எட்டியது. சரி. இந்த முனிவர்களுக்கு துறவு என்றால் என்ன என்பதைப் புரியவைக்க வேண்டுமென முடிவு செய்தார். அடுத்த நாளே அரண்மனையிலிருந்து ஓர் ஆள் இந்த முனிவர்களைத் தேடிவந்தார். நாளை மதியம் எங்கள் ராஜா உங்கள் எல்லாருக்கும் ஒரு விருந்து வைக்கப்போகிறார். நீங்கள் எல்லோரும் அதில் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறார் என்று அந்த ஆள் முனிவர்களிடம் கூறினார்.

அந்த முனிவர்கள் நல்ல சாப்பாட்டைக் கண்ணாலே பார்த்தே ரொம்ப நாளாகிவிட்டது. அப்படி இருக்கும்போது அரண்மனை விருந்து என்றால் வேண்டாம் என்றாசொல்வார்கள். அடுத்தநாள் அத்தனை முனிவர்களும் விருந்து மண்டபத்திலே ஆஜர்! 50 முனிவர்கள். அவர்கள் எல்லோருக்கும் தலை வாழையிலை போட்டு பலவிதமான உணவுவகைகளைப் பரிமாறினார்கள்! அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் ஒவ்வொரு இலைக்கும் மேலே ஒரு நீளமான தலைமுடிதொங்கிக் கொண் டிருந்தது. அது எப்பொழுது இலையில் விழுந்துவிடுமோ என்று பயந்து கொண்டே முனிவர்கள் சாப்பிட்டார்கள். இலையிலே உணவுப் பொருள் முடிய முடிய மீண்டும் மீண்டும் பரிமாறினார்கள். முனிவர்களும் வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள்.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் ஜனகர் வந்தார். முனிவர்களுக்கு வணக்கம் செலுத்தினார். சாப்பாடு நன் றாக இருந்ததா என்று கேட்டார். அது மட்டுமல்ல சாம்பார் எப்படி இருந்தது? வறுவல் எப்படி இருந்தது? துவையல் எப்படி இருந்தது? காய்கறி எப்படி இருந்தது என்று ஒவ்வொன்றாக விசாரித்தார். இதற்கு எவரும் பதில் சொல்லவில்லை. உடனே ஜனகர் ஏவலர் பக்கம் திரும்பி முனிவர்களுக்கு சரியாகச் சாப்பாடு போட்டீர்க்ளா எனக் கேட்க ஆரம்பித்தார். உடனே முனிவர்கள் வாய் திறந்து பேச ஆரம்பித்தார்கள் அவர்களை ஏன் கேட்கிறீர்கள்? நாங்களே பதில் சொல்கிறோம். அவர்கள் நன்றாகப்பரிமாறினார்கள். நாங்களும் நன்றாகச் சாப்பிட்டோம் என்றார்கள். அப்படியானால் சாப்பாடு எப்படி இருந்தது என்று கேட்டால் ஏன் உங்களால் பதில் சொல்ல முடியவில்லை என்று கேட்டார் ஜனகர்.

எப்படிச் சொல்லமுடியும்? எங்கள் நினைப்பு முழுவதும் சாப்பாட்டில் எங்கே இருந்தது? அந்தத்தலை முடி எப்பொழுது சாப்பாட்டில் விழுந்து விடுமோ என்ற நினைப்பில் தானே சாப்பிட்டோம். சாப்பாடு எப்படி இருந்தது என்று எங்களுக்குத் தெரியாது என்றார்கள்.

அப்பொழுது ஜனகர் சொன்னார் "அதே மாதிரித்தான் நானும் இருக்கின்றேன். பிரம்மத்தையே நினைத்துக்கொண்டிருக்கிற எனக்கு இந்த ராஜ போகங்கள் சுகமா? இல்லையா? என்று எப்படித்தெரியும்? என்றார். அதன்பின்தான் முனிவர்களுக்கு தெளிவு உண்டானது. ஒருவர் எங்கே இருந்தால் என்ன? எதை நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பது தான் முக்கியம் என்பதை உணர்ந்தார்கள்.

இல்லறத்திலே இருந்துகொண்டு பிரம்மத்தை நினைத்துக் கொண்டிருக்கிறவர்களும் உண்டு. துறவியாக இருந்து கொண்டே இல்லறத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவர்களும் உண்டு. நினைப்புதான் முக்கியம்.

இந்தக் காலத்து இல்லறத்துறவி ஒருவரிடம் கேட்டேன் ஏன்சார்... உங்களை உட்காரவைத்து உங்கள் சாப்பாட்டுக்கு மேலே ஒரு தலைமுடி தொங்கிறமாதிரிச் செய்தால் உங்கள் கவனம் எதிலே இருக்கும் என்று கேட்டேன். என் கவனம் சாப் பாட்டிலே தான் இருக்கும். தலை முடி பற்றிக் கவலைப்படமாட்டேன் என்றார் அவர். ஏன்? என்று கேட்டேன்.

எங்கள் வீட்டிலே சாப்பாட்டிலே தலைமுடி கிடப்பது சகஜம் அதனாலே அது பழக்கமாகிவிட்டது. சாப்பாட்டிலே தலைமுடி கிடந்தாலும் எடுத்துவிட்டுச் சாப்பிடுவது பழக்கமாகிவிட்டது. ஏதாவது வாய்திறந்தால் அன்றைய சாப்பாடே கிடைக்காது என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# யாழ்.மாவட்ட பால் உற்பத்தியும், சந்தைப்படுத்தலும்

அண்மைக்காலமாக என்றுமில்லாத அளவிற்கு பால்மாவின் விலையேற்றத்தால் நிறை சத்துக்களைக் கொண்ட பால் பாவனை அன்றாட பாவனைக்கு ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. தற்போது அண்ணளவாக குடா நாட்டு மக்களால் 85% பால் பவுடரும் 15% மட்டும் திரவப்பாலுக்கு பாவிக்கப்படுகின்றது.

மக்களின் தேவையில் 15% மட்டுமே பூர்த்தி செய்யும் பால் ஒரு ஒழுங்கமைப்பற்ற சந்தைப் படுத்தல் முறைமையால், பால் உற்பத்தி கூடிய இடங்களில் விற்பனை செய்யமுடியாது போனதும், பல இடங்களில் பாலைப் பெறுவது மிகவும் கடினமாக உள்ளது.

பாலானது இலகுவில் பழுதடையக்கூடிய பொருளாகும். எமது பிரதேச சூழல் வெப்பத்திற்கு 4-5 மணிக்கு கறந்த பாலை பழுதடையாமல் பாதுகாக்க முடியாது உள்ளது. எனவே பால் உற்பத்தியில் ஈடுபடும் பண்ணையாளர் கீழ் வரும் விடயங்களை கவனத்தில் கொண்டால் மேலும் ஒரிரு மணித்தியாலங்கள் குளிரூட்டில் பெற்று கூட பாவிக்க முடியும்.

பண்ணையாளர்கள் கவனிக்க வேண்டியவை.

1. பால் பண்ணையை சுத்தமாக வைத்திருத்தல்.

2. பால் எடுக்கும் பாத்திரங்களின் சுத்தம் (பிளாஸ்ரிக் தவிர்க்கப்பட வேண்டும்)

3. பால் எடுப்பதில் சுத்தம்.

என்பன முக்கியமான விடயங்களாகும்.

இப்படி பெறப்படும் பாலானது, முடியுமான வரை பாலாகவே Liquid raw milk விற்பனை செய்யப்படவேண்டியது அவசியமானதாகும். பாலைச் சந்தைப் படுத்துவோர். பாலில் ஒரு பகுதியை பால் உற்பத்திப் பொருட்களாக மாற்றி செய்ய வேண்டும். இவ் உற்பத்தி பிரதேச கால நிலை மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடலாம்.

1. மாரிகாலங்களில் தயிர் உற்பத்தியைத் தவிர்த்து, பால் பன்னீர் தயார் செய்து விற்பனை செய்யலாம்.

திரவ பால் பாவனை தற்போது மற்றப் பொருட்களின் விலையோடு, அதன் போசாக்குப் பெறுமானத்தையும் ஒப்பிடும்போது மலிவான ஒரு பொருளாகவே நாம் கருதலாம். எனவே மக்கள் திரவ பால் பாவனையை அதிகரிப்பின், எம்முடைய மக்களின் பாலுக்கு வாய்ப்பு ஏற்படும். பண்ணையாளரும் இதனால் வருமானம் பெற்று, பால், மாடு வளர்ப்பதற்கு அக்கறை எடுப் பார்கள். இது திரும்பவும் , பால் உற் பத்தியில் மேலும் ஒரு அதிகரிப் பையும் தன் நிறைவையும் பெற வழி வகுக்கும்.

இதைத்தவிர பண்ணையாளர் மாடுகளின் உணவூட்டலில் திட்டமில்லாத தன்மை காணப்படுவதால், தற்போது உள்ள அடர் தீவன விலை ஏற்றத்திற்கு பாலிற்கு உரிய விலை கிடைப்பதில்லை எனவும் குறைபடுகின்றனர்.

அசையூண் விலங்கினது சமிபாட்டுத்தொகுதி புல் இலை, குழைகளின் மூலமே உற்பத்திக்கு உரியதாகும். சினைப்பட்ட பசு, கூடிய பால் உற்பத்தி உள்ள பசுக்களிற்கு மட்டுமே அடர்ந்த தீவனம் அவசியமானதாகும். ஆனால் மக்கள் தேவையற்ற விதத்தில் அடர்த்தி தீவனத்தை பிரதான உணவாக கைக் கொள்வதால் பாலின் உற்பத்திச் செலவு அதிகமாகவே காணப்பட்டு இலாப வீதம் குறை வடை கின்றது. எனவே கால்நடைப் பண்ணையாளர், சந்தைப்படுத்துபவர், நுகர்வோர் மத்தியில் சமநிலை பேணப் படுமாயின் கால்நடை வளர்ப்பு மிகவும் இலாபகரமான தொன்றா கும். எனவே இனிமேல் வரும் காலங்களில் இத்தகைய முறையை கைக் கொண்டு குடாநாட்டின் தேவையின் 50% தேவையை பாலாக பூர்த்தி செய்ய ஏதுவாக திட்டங்கள் வகுக்கப் பட்டு பாலை எல்லோரும் ஒரு இலகு வான பாவனைப்பொருளாக அன்றாடப் பாவனைக்கு உருவாக்குவோம்.

டாக்டர் வ.அமிர்தலிங்கம்
உதவிப் பணிப்பாளர் (வடக்கு)

# 2008 ஏப்ரலில் இருந்து புகைக்கும் வாகனங்களுக்கு வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது

2008 ஏப்ரல் மாதத்தில் இருந்து ஒவ்வொரு வாகனத்திற்கும் புகைவெளியேற்ற பரிசோதனைச் சான்றிதழ் அவசியமாகும். இதற்கான வாகன பரிசோதனைகளை மேற் கொள்வதற்கு இரண்டு கம்பனிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இவர்களால் பரீட்சித்து மோட்டார் வாகனத் திணைக் களத்தினால் வழங்கப்படும். சான்றிதழ் இல்லாத வாகனங்கள் வீதிகளில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என மோட்டார் போக்குவரத்து அணையாளர் B.விஜயரட்ண கூறியுள்ளார்.

சகல வாகனங்களுக்கும் ஏப்ரல் 2008 இல் இருந்து மேற்படி பரீட்சைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரு கம்பனிகளினாலும் நிர்ணயிக்கப் பட்ட கட்டணங்களாவன, மோட்டார் சைக்கிள் ரூ. 247.50, முச்சக்கரவண்டி ரூ.302.50, மோட் டார் கார் ரூ.660, இரட்டை நோக்கத்திற்கான வாகனங்கள் ரூ.715 லொறி-ரூ.935, தனியார் பஸ்வாகனம்-605, பிறைம்மூவர் ரூ.990 வாகனங்களிலிருந்து ஆபத்தான புகை கக்குதலைதடுக்கும் நோக்குடன் மோட்டார் போக்குவரத்துச் சட்டம் 1951 இல் திருத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டதன் பின்னர் இந்த புகை கக்கும் பரீட்சைகளை நடாத்தும் திட்டம் செயல் முறைக்கு கொண்டுவரப்படும் என B.விஜேரத்ன பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநட்டில் தெரிவித்துள்ளார்.

Laughfs Eco sri Put Ltd, cleanco Lanka (pvt) Ltd ஆகிய இரு கம்பனிகளும் போக்குவரத்து, சுற்றுச் சூழல், மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு அமைச்சுடன் மேற்படி பரீட் சைகளை மேற்கொள்வது பற்றி ஒப்பந்தம் செய்துள்ளது எனவும் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் Drive green ட்றைவ கிறீன் என்ற பெயரில் 36 பரீட்சை நிலையங்களை அதற்குரிய இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களுடன் நிறுவி வாகன உரிமையாளர்களுக்கு வாகனங்கள் பரீட்சித்து சான்றிதழ்களை வழங்க வேண்டும் என வெகபிட்டியா விளக்கினார்.

இச்சான்றிதழ் வரு டாந்தம் புதுப் பிக்க வேண்டும் ஏனெனில் சூழலைப் பாதுகாப் பையும் துய்மையை உறுதிப் படுத்தவும் இது அவசியமாகும் இதற்கான செலவு வாகன உரிமையாளர்களிடமிருந்துவாகனத்தின் தன்மையைப் பொறுத்து அறவிடப் படும் என்று கூறி னர்.

இச் சோதனைகள் சர்வதேச தரத்தில் உயர்ந்த தொழில் உபகரணங் களைப் பாவித்து செய்யப்படும். சான்றிதழ் கணினியில் சகல வாகன நிலை பற்றிய தக வல்களையும் பாவிக்கும் எண்ணை வகை பற்றிய தக வல்களையும் உள்ளிடக்கிய தாக தயாரிக்கப்படும். வருங்காலத்தில் புகை கக்கும் பரீட்சைச்சான்றிதழ் பெறப்படாத வாகனங்களுக்கு வருமானவரி அனு மதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.

தற்பொழுது 1.9 மில்லியனுக்கு மேற்பட்ட வாக னங்கள் வீதிகளில் ஓடுகின்றன. புகைக்கும் பரீட்சை சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையில் பெறும் வருமானத்தில் 10% மட் டுமே மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கும் என விஜேரட்ண கூறினார்.


எப்படியிருந்த போதும் போக்குவரத்துப் பொலிஸாருக்கு அதிகமாக வீதியில் புகைக்கும் வாகனங்களுக் கான அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ-6)

# இராசிபலன்

16.11.2007
(ஐப்பசி 30, வெள்ளிக்கிழமை)
சஷ்டமி பிற்பகல் 12.08 மணிவரை
உத்தராடம் முற்பகல் 09.42 மணிவரை
இராகுகாலம் 10.37-12.07 மணிவரை
சுபநேரம் 06.07-07.37 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, காரிய நன்மை, சுபநிகழ்வு, தூரதேசச்செய்தி. |
| இடபம் | ஆன்றோர் மதிப்பு, உடல்உழைப்பு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல். |
| மிதுனம் | ஆரோக்கியக்குறைவு, வீண்பகை, முயற்சி தடங்கல், போசணசுகம். |
| கடகம் | தெய்வதரிசனம், அபூர்வசந்திப்பு, கலந்துரையாடல், காரிய அனுகூலம். |
| சிங்கம் | சுகவாழ்வு, திடீர்பயணம், பணவருவாய், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், குடும்பக்கவலை, வீண் செலவு. |
| துலாம் | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், ரோகநிலை, காரியதாமதம். |
| விருச்சிகம் | வாக்குமேன்மை, அன்னியர் சந்திப்பு, பொருள்சேர்க்கை, தெய்வ தரிசனம். |
| தனு | பணக்குறைவு, தொழில் மந்தநிலை, மரியாதைக்குறைவு, முயற்சிதாமதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், பெரியோர் சந்திப்பு, தெய்வதரிசனம். |
| கும்பம் | பிதாசிந்தை, கோபப்படுதல், பணவிரயம், திடீர்பயணம். |
| மீனம் | தெய்வதரிசனம், தொழில்நன்மை, மனமகிழ்ச்சி, காரியநன்மை. |

வ ள வ ன்.



# பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி கோவில்

## கந்தசஷ்டி மகோற்சவம்

ஏழாம் நாள் - 16.11.2007

தீர்த்தத்திருவிழா

கடைக்கண் பாரொருக்காலே பார்க்கிலுமெய்க்
கனநோய் நின்றிடு மோ மேலே
தெடைக் கலங்காரந்தருந்துங்கப் பன்னிருதோளா
அடைக்கலமணைந் தாருக் காக்கந்தந் திடுதோளா


கண்ணொளியைத் தந்தாய் மறப் பேனோ வக்
கணையை யிறு மட்டு மெந்தாய்
திண்ணிய மனத் தெவ்வர் சிரிப்பையு மாற்றினாயே
எண்ணிலிருட் கடலிலெடுத்து மேலேற்றினாயே
தந்த கண்ணொளியை வாங்காதே வாங்கிற் பழி
சக முளமட்டு நீங்காதே
எந்த நாளடி யேனின் னிசை பாடாதிருந்தேனே
அந்த நாள் வருமட்டு மதுவிடப் பொருந்தேனே
ஆரோடினியிரப்பேனே நின்னையன்றி
யறிவேனோ பிறர்தமை நானே
பா ரோடு யிர் முழுதும் படைத்திடுசர்வேசா
தேரோடு மணி வீதித் திருக்கந்தவனவாசா

அமரர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியில் ஹர்பஜன், கார்த்திக் சேர்ப்பு

(மும்பை)

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் ஹர்பஜன், முரளி கார்த்திக்கிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பதான், சேவாக் அதிரடியாக நீக்கப்பட்டனர்.




இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் வரும் 22ஆம் திகதி துவங்குகிறது. இதற்கான அணித்தலைவரான கும்ளே அறி விக்கப்பட்டுள்ள நிலையில் முதல் இரு போட்டி களுக்கான அணி தேர்வு மும்பையில் நடந்தது. இதில் தேர்வுக்குழு தலைவர், உறுப்பினர்கள் மற்றும் கும்ளே கலந்து கொண்டனர்.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் ஒரு நாள் தொடர்களில் ஜோராக பந்துவீசி வரும் முரளி கார்த்திக், ஹர்பஜனுக்கு தேர்வுக்குழு "கிரீன் சிக்னல்" அளித்தது. ஹர்பஜன் கடைசியாக கடந்த ஜனவரியில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம்பிடித்திருந்தார். முரளிகார்த்திக் சுமார் 3 ஆண்டுகள் கழித்து வெள்ளை உடையில் களம் இறங்க காத்திருக்கிறார். இதனால் கூடுதல் துடுப்பாட்டக்காரராக இடம்பிடிக்கும் வாய்ப்புகளுடன் காத்திருந்த காம்பிரின் கனவு கலைந்தது. இங்கிலாந்து தொடரில் இடம்பிடித்திருந்த ரமேஷ் பவார், இஷாந்த் சர்மாவிற்கு பதிலாக இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்கா, பங்களாதேஸ் மற்றும் இங்கிலாந்து என வெளிநாடுகளில் ஜோரான துவக்கம் அளித்த வாசிம் ஜாபர், தினேஷ் கார்த்திக் தங்கள் இடத்தை தக்க வைத்துக் கொண்டனர்.

தற்போதைய ஒருநாள் தொடருக்கு புறக்கணிக்கப்பட்ட முன்னாள் அணித்தலைவர் டிராவிட் ரஞ்சி போட்டியில் இரட்டை சதம் அடித்து அசத்தினார். இதனால் இவரை தேர்வு செய்வதில் எந்த சிக்கலும் ஏற்படவில்லை.

தேர்வுக் குழுவின் கழுகுப்பார்வையில் சிக்கியுள்ள முன்னாள் அணித்தலைவர் கங்குலியும் தப்பியுள்ளார். மீண்டும் அணியில் இடம் பிடித்த பின்னர் இவர் டெஸ்ட் போட்டிகளில் ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஒரு நாள் போட்டி துணைத் தலைவர் யுவராஜ், அனுபவ லட்சுமணும் தங்களது இடத்தை உறுதி செய்துள்ளனர்.

இவர் தவிர சச்சின், தோனி என அதிரடி துடுப்பாட்ட வீரர்களும் உள்ளனர். வேகக்கூட்டணியாக ஆர்.பி.சிங், ஜாகிர் மற்றும் ஸ்ரீசாந்த் செயல்படலாம்.

துல்லியமாக பந்துவீசி வரும் பதானுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை இதேபோல் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 309 ஓட்டங்கள் குவித்த சேவக்கையும் கண்டுகொள்ளவில்லை. அணிகும்ளே அணித்தலைவர் தோனி, டிராவிட், சச்சின், கங்குலி, லட்சு மண், யுவராஜ், ஹர்பஜன் ஜாகிர், வாசிம் ஜாபர், ஆர்.பி.சிங், ஸ்ரீசாந்த் முரளிகார்த்திக், தினேஷ் கார்த்திக். (அ-5)

# ஆஸியின் சிறந்த ஒருநாள் போட்டி வீரராக கில் கிறீஸ்ட் தெரிவு

அவுஸ்திரேலியாவின் சிறந்த ஒருநாள் போட்டி வீரராக கில்கிறீஸ்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒருநாள் போட்டிக்கான சிறந்த அவுஸ்திரேலிய வீரரை ஓட்டெடுப்பு மூலம் தேர்வு செய்யும் கூட்டம் நேற்று முன்தினம் மெல்போர்னில் நடந்தது.

இதில் அவுஸ்திரேலியாவுக்காக ஒருநாள் போட்டியில் விளையாடிய 163 வீரர்களை அந்நாட்டு கிரிக்கெற் சபை அழைத்திருந்தது. ஆனால் 110 பேர் மட்டும் கலந்துகொண்டனர் ஓட்டெடுப்பின் முடிவில் கில்கிறீஸ்ட் 38 சதவித வாக்குகளுடன் முதலிடத்தை பிடித்தார்.

தற்போதைய அணித்தலைவர் பொண்டிங் 19, ஸ்டீவ் வாக் 14 சதவித ஓட்டுடன் 2ஆவது மற்றும் 3ஆவது இடத்தை பிடித்தனர். இது குறித்து கில்கிறீஸ்ட் கூறுகையில், இது எனக்கு கிடைத்த அரியகௌரவம். அவுஸ்திரேலிய



அணிக்காக விளையாடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார். (அ-5)

# இன்று ஆஸி- இலங்கை 2ஆவது டெஸ்ட் ஆரம்பம் வோர்ணின் சாதனையை முறியடிப்பாரா முரளி?

(ஹோபார்ட்)

டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் அதிக விக்கெற் கைப்பற்றியவர் வோர்ண். அவுஸ்திரேலியாவை சேர்ந்த அவர் 145 டெஸ்டில் 708 விக்கெற் வீழ்த்தியுள்ளார். அவருக்கு அடுத்தபடியாக சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 114 டெஸ்டில் 702 விக்கெற் கைப்பற்றியுள்ளார். வோர்ணின் சாதனையை முறியடிக்க முரளிதரனுக்கு இன்னும் 7 விக்கெற்தேவை.

அவுஸ்திரேலிய மண்ணில் வோர்ணின் சாதனையை முரளிதரன் முறியடிப்பாரா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு தங்கள் மண்ணில் முரளிதரனை புதிய சாதனை படைக்க விடமாட்டோம் என்று பொண்டிங் ஏற்கனவே கூறி இருந்தார்.

பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் முரளிதரன் 2 விக்கெற் மட்டும்தான் கைப்பற்

## விளையாட்டுச் செய்திகள்

றினார். இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்ததால் அவரால் 2ஆவது இன்னிங்சில் பந்து வீச முடி யாமல் போனது. அவுஸ்திரேலியா-இலங்கை அணிகள் மோதும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஹோபார்ட்டில் இன்று தொடங்கு கிறது. இதில் முரளிதரன் 7 விக்கெற் கைப்பற்றி புதிய சாதனை படைப்பாரா என்பதை எதிர்பார்ப்போம். (அ-5)

# அந்தரத்தில் ஒரு போராட்டம்

(சான்ஜான்)

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் உலகில் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். படத்தில் காண்பது போர்டோ ரிகோ நாட்டின் சான்ஜான் நகரில் கட்டப்பட்டுவரும் பாசியோ கரீப் என்னும் சொகுசு அடுக்குமாடிக் கட்டடம்.

கடலுக்கு அருகில் கட்டப்படும் இக்கட்டடத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர் ஆல்பெர்டோ ஜீசஸ் எதிர்ப்பு தெரிவித்தார். முயற்சி பலிக்காததால் அதே கட்டடத்தில் கட்டுமானப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் கிரேனின் உச்சியில் ஏறி (உள்படம்) ஒருவாரகாலம் போராட ஆரம்பித்துவிட்டார்.

காவல்துறையும் ஹெலிகாப்டரில் சுற்றியும், நீரைப் பீய்ச்சியடித்தும் பார்த்தது. அசராத ஆல்பெர்டோ ஒரு வழியாக ஒரு வாரம் கழித்து தற்போது கீழே இறங்கிவிட்டார்.



கட்டுமான நிறுவனம் உரிய அனுமதியையும் பெறவில்லை என்பது அவரது கோபத்திற்கு கூடுதல் காரணம். (அ-5)

# பாசம் கொண்ட அணில்

(டிகாடர்)

நாய்க்கு மட்டும்தான் உரிமையாளர்கள் மீது பாசம் அதிகம் என நினைத்துக்கொண்டு இருக்கிறீர்களா? அப்படி என்றால் உங்கள் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரமிது.

படத்தில் மிஸ்சியலா எர்ப் இளம் பெண்ணை கொஞ்சிக் கொண்டு இருக்கிறது குட்டி அணில். அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் உள்ள டிகாடரில்தான் இந்த காட்சி. மிஸ்சியலாவுடன் துள்ளிக் குதித்து விளையாடுகிறது இந்த அணில். அவரது தோள்பட்டை வரை ஏறி முகர்த்து பார்க்கிறது. இந்த அணி



லுக்கு ரைடர் என பெயர் வைத்துள்ளார் மிஸ்சியலா.

இந்த அணில் சாகும் நிலையில் இருந்த போது, மிஸ்சியலாவின் மாமியார்தான் பார்த்து அதை எடுத்து வந்தார். அதை மிஸ்சியலா கண்ணும் கருத்துமாக கவனித்து காப்பாற்றிவிட்டார். அந்த பாசமோ என்னமோ இப்படி ஒட்டிக்கொள்கிறது. (அ-5)

# வீட்டு சிறையிலிருந்து தப்பிய இம்ரான்கான் லாகூரில் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வீட்டு சிறையில் இருந்து தப்பிய இம்ரான்கான், லாகூரில் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் பங்கேற்க வந்தபோது கைதுசெய்யப்பட்டார்.



பாகிஸ்தானில் கடந்த 3ஆம் திகதி அவசர சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அரசியல் கட்சி நடத்திவரும் முன்னாள் கிரிக்கெற் வீரர் இம்ரான் கான் வீட்டு சிறையில் வைக்கப் பட்டார். ஆனால் சில மணி நேரங்களில் அவர் அங்கு இருந்து தப்பிவிட்டார். தொடர்ந்து தலை மறைவாக இருந்து வந்த இம்ரான் கான், போன் மூலம் டிவி சேனல்களுக்கும், பத்திரிகைகளுக்கும் பேட்டி அளித்துவந்தார். தனது பேச்சை வீடியோவில் பதிவுசெய்து அவசரகாலச் சட்டத் துக்கு எதிராக பாகிஸ்தான் மக்கள் போராட்டம் நடத்தவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். ஆனால் அவர் எங்கு இருக்கிறார் என்ற தகவல்மட்டும் வெளியாகவில்லை. இந்த சூழ்நிலையில், லாகூர் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முந்தி னம் போராட்டம் ஒன்றை நடத்தினர். இதில் பங்கேற்க இம்ரான்கான் வந்தார்.

உடனடியாக 200 மாணவர்கள் அவரை சூழ்ந்து கொண்டு தலைக்கு மேலே தூக்கி வைத்துகொண்டாடினர். அப்போது சாதாரண உடையில் அங்கு இருந்த பொலிஸார் இம்ரான் கானை சுற்றிவளைத்து கைதுசெய்தனர். அருகில் உள்ள கட்டடத்துக்கு அவரை அழைத்து சென்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் தான் இம்ரான்கான் கைதுசெய்யப்பட்டதற்கு காரணம். உள்ளூர் நிர்வாகத்துக்கு பயந்து அவர்கள் இம்ரான்கானை பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

லாகூரில் வீட்டு காவலில் வைக்கப்பட்ட பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பெனாசிர் தொடர்ந்து காவலில் தான் இருந்தார். லாகூரில் அவர் தங்கியிருக்கும் வீட்டை சுற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். லாகூரில் இருந்து இஸ்லாமாபாத்தை நோக்கி அவரது கட்சி நடத்திவரும் வாகன பேரணி தொடர்ந்து முன்னேறி சென்றுகொண்டிருக்கிறது.

எனினும் பேரணியை முன்நின்று நடத்திய பாகிஸ்தான் மக்கள் கட்சியின் பஞ்சாப் மாகாண தலைவர் ஷா முகமது குரோஷி கைது செய்யப்பட்டுள்ளார். முஷாரப் முரண்டு தொடர்கிறது பெனாசிர் மற்றும் அதிபர் முஷாரப் இடையேயான ஒப்பந்தம் முறிவுக்கு வந்துவிட்ட சூழ்நிலை காணப்படுகிறது. பெனாசிர் மூன்றாவது முறையாக பிரதமர் பதவியை ஏற்க முடியாது என்று முஷாரப் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

மேலும் அவசரகால சட்டத்தை ரத்துசெய்ய வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையையும் ஏற்க மறுத்துவிட்டார். தி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முஷாரப் கூறியிருப்பதாவது, ஒருவர் இரண்டு முறை மட் டுமே பிரதமர் பதவி வகிக்கலாம் என்று பாகிஸ்தான் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே அரசியல் சட்டப்படி மூன்றாவது முறையாக அவர் பிரதமராக முடியாது. அது சட்டவி ரோதமானது. பாகிஸ் தானில் அவருக்கு செல்வாக்கு இல்லை. தேர்தல் நடக்கும் போது இந்த உண்மை வெளிச்சத்துக்கு வரும். இடையூறு ஏற்படாமல் தேர்தல் நடக்க வேண் டும் என்பதற்காகத் தான் அவசரகால சட்டம் பிரகடனப்படுத் தப்பட்டது. எனவே அவசர காலச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் கூறுவதை ஏற்க முடியாது. அவசர காலச் சட்டம் எப்போது முடிவுக்கு வரும் என்பதை கூறமுடியாது. அதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டும். இவ்வாறு முஷாரப் கூறினார். (அ-5)

# கசியுது கப்பல்

(சான்பிரான்சிஸ்கோ)

பிரம்மாண்டமான இந்த சரக்கு கப்பல் ... பது அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ பகுதியில் காஸ்கோ பூசன் என்ற இந்த கப்பலில் பெட்ரோல் ஏற்றப்பட்டு இருந்தது.

நடுக்கடலில் இந்த கப்பல் விபத்துக்கு



## உலக தரிசனம்

உள்ளானது. ஒரு பாலத்தின் அடிப்பகுதியில் மோதிவிட்டது. இதனால் இதனுடைய பக்கவாட் டில் 90 அடி நீளத்துக்கு உடைந்த தால் இதில் இருந்து பெட்ரோல் கடலில் கொட்டியது.

மொத்தம் 58 ஆயிரம் காலன் பெட்ரோல் கொட்டியுள்ளது. இச்சம்பவம் குறித்து அங்கு பொலிஸ் விசாரணைக்கு உத்தரவிடப்பட் டுள்ளது. (அ-5)

# அரசாங்கம் சம்பள உயர்வினை வழங்கவேண்டும் இல்லையேல் போராட்டம் ஆரம்பிக்கப்படும்

## ஜே.வி.பி. எம்.பி. லால்காந்த எச்சரிக்கை

வரவு–செலவுத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதனால் அரசு மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த ஊழியர்களுக்கு அரசாங்கம் வரவு–செலவுத் திட்டத்தின் மூலமாக சம்பள உயர்வை வழங்கவேண்டும். இல்லையேல் இரு துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் வீதியில் இறங்குவது தவிர்க்க முடியாது என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த எச்சரிக்கை விடுத்தார்.

தொழிற்சங்க போராட்டங்களின் போது தொழிற்சங்கங்கள் வெற்றி பெறுமா? அல்லது அரசாங்கம் வெற்றி பெறுமா? என்பதை அச்சந்தர்ப்பத்தில் பார்த்துக்கொள்வோம் என்று சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியேறிய போது சம்பந்தப்பட்ட வரவு –செலவுத் திட்டத்தின்போது அரச ஊழியர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 1000 ரூபாவும் அதற்கு பின்னர் அதிகரிக்கும் ஒவ்வொரு வாழ்க்கைச் சுட்டெண்களுக்கும் தலா 2.50 வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது.

இதேநேரம் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4304 ஆக இருந்த வாழ்க்கைச் சுட்டெண் 426.5 புள்ளிகளால் அதிகரித்துள்ளது.

இதன்பிரகாரம் 2007 ஜூன் மாத இறுதியில் அரச ஊழியர் ஒருவருக்கு ரூபா1066.25 ஐ அரசாங்கம் வழங்க வேண்டியிருந்தது. எனினும் அந்த தொகையை வழங்காத அரசாங்கத்திற்கு 375 ரூபாவை தருவதாகக் கூறியுள்ளது. ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட 1000 ரூபாவுடன் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக ரூபா 2066.25ஐ வழங்கப்பட வேண்டிய நிலையில் அரசாங்கம் மொத்தமாகவே 1375 ரூபாவை மட்டும் வழங்கியது. அடுத்த ஆண்டிற்கான வரவு –செலவுத் திட்டத்தின் போது ஜனாதிபதி, அரசாங்க ஊழியர்களுக்கு2125 ரூபா வழங்கப்படுவதாகவும் அடுத்த ஜனவரிமாதம் முதல் 2500 ரூபாவாக அதிகரிக்கப்படுவதாகவும் கூறினார்.

அரசாங்கம் விடயத்தை மூடி மறைத்து பேசுவதை அரச ஊழியர்கள் புரிந்துகொள்வார்கள். எனினும் 3000 ரூபா சம்பளவுயர்வு கேட்டமைக்கு அரசாங்கம் 2500 ரூபாவை வழங்குவதாக சிலர் கருதுகின்றனர். உண்மையில் 375 ரூபாவை மொத்தமாகக் கூறுகின்றனர்.

எனினும் அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 19,200 ரூபாவை அரசாங்கம் வழங்கவில்லை. அத்துடன் தனியார் துறையினரும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். முடியாதெனக் கூறிவிட்டால் சிக்கலில்லை.

இன்று அரசாங்கத்தின் காலத்தில் மலசலகூடத்திற்குக் கூட வரி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதனால் தனியார் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுமல்ல மக்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும்.

வரவு –செலவுத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதனால் அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும். அந்த பேராட்டம் ஆரம்பிக்கப்பட்ட தன் பின்னர் அது பிரபாகரனுக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கை என்று கூறக் கூடாது.

இரு துறையினருக் கும் சம்பள உயர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் தொழிற் சங்கங்களின் போராட்டங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். (அ-5)

## இலவச மருத்துவ முகாம்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் கந்தரோடை கிராமத்தில் நடாத்தப்படும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. கந்தரோடையிலுள்ள தமிழ் கந்தையா வித்தியாசாலையில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். மகாதேவா ஜே.பி. தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வுக்கு பிராந்திய தலைவர் லயன் கே.என். பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த மருத்துவமுகாமில் பங்குபற்றி பயனடையுமாறு கிராமிய மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அத்துடன் இம்மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற கண்பரிசோதனை முகாமில் பங்குபற்றியவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும் என சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளர் லயன் எஸ். யோகானந்தராஜா அறிவித்துள்ளார். (அ)

## மதுரகவி எம்.பி அருளானந்தனுக்கு 'சிவநெறித்தொண்டர்' பட்டம்

கேதார கௌளி பூர்த்தி தினமான 9 ஆம் திகதி உரும்பிராய் கிழக்கு கண்ணகை ஸ்ரீ பரமேஸ்வரி தேவஸ்தான பரிபாலன சபையினரும் ஆலய அந்தண பெருமக்களும் இணைந்து மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் (சமாதான நீதவான்) ஆசிரியரது ஆலய ஆன்மீக அற பணிகளைக் கௌரவித்து 'சிவநெறித் தொண்டர்'என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் மயில்வாகனம் நிர்ணயநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவிலேயே இவ்விருது வழங்கப்பட்டது. (அ)

## தங்க ஆபரணம் உரியவரிடம் கையளிப்பு

இவ் வருடம் ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் ஆலய வீதியில் சென்சாள்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியைகளான செல்விகள் சத்தியபாமா மற்றும் உசாந்தினி ஆகியோரால் கண்டெடுக்கப்பட்ட கைச்சங்கிலியொன்று மாநகரசபையின் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கைச்சங்கிலியைத் தவறவிட்டதாக உற்சவகாலப் பணிமனையில் முறைப்பாடு செய்தவர்களை நேற்று முன்தினம் அழைத்து திருப்திகரமான ஆதாரங்களைச் சமர்ப்பித்தவரிடம், மாநகரசபையின் செயலாளரினால் மேற்படி ஆசிரியைகளின் முன்னிலையில் கைச்சங்கிலி கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பங்குகொண்ட மாநகரசபையின் செயலாளரும் சுகாதார வைத்திய அதிகாரியும் மேற்படி ஆசிரியைகளின் நேர்மையான செயலைப் பாராட்டினர். இவர்களது செயலினால் பாடசாலைக்கும் நற்பெயர் கிடைத்துள்ளதாக கைச்சங்கிலியை மீளப் பெற்றுக்கொண்டவர் நன்றியுடன் மகிழ்ச்சி தெரிவித்தார் என யாழ்.மாநகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

## உள்ளூர் உணவு உற்பத்தியினை துரிதப்படுத்தல் தேசிய வேலைத் திட்டம் 2007 - 2010

இலங்கை மக்கள் அனைவரது பங்களிப்புடன் உணவு உற்பத்தி யினை ஊக்குவிப்பதற்காகவும் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கா கவும் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கீழ்வரும் தலைப்புக்களில் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

1. கிராமிய வீட்டுத் தோட்ட அமைப்பு
2. மாணவர் வீட்டுத்தோட்ட அமைப்பு
3. பாடாசலைத் தோட்ட அமைப்பு
4. நகர வீட்டுத் தோட்ட அமைப்பு
5. அலுவலக வளாக வீட்டுத் தோட்ட அமைப்பு

ஒரு செய்கையாளர் மேற்குறித்த தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் மட்டும் போட்டியிடலாம். போட்டிகள் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத் திலும் நடாத்தப்படும் மாவட்ட மட்டத்தில் ஒவ்வோர் தலைப்பிலும் சிறந்த மூன்று போட்டியாளர்க ளும் மாகாண மட்டத்தில் ஒவ்வோர் தலைப்பிலும் சிறந்த ஒரு போட்டியாளரும் தேர்வு செய்யப்பட்டு பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பணப்பரிசில் விபரம் கீழ்வருமாறு,

| | மாவட்ட மட்டம் | | மாகாணமட்டம் | |
|---|---|---|---|---|
| போட்டி வகை | பரிசு தரம் | பரிசுத் தொகை | பரிசு வகை | மொத்த பரிசு தொகை |
| கிராம மட்டவீட்டுத் தோட்ட அமைப்பு | 1ம் பரிசு<br>2ம் பரிசு<br>3ம் பரிசு | 15,000.00<br>10,000.00<br>5,000.00 | மாகாண மட்டத்தில் சிறந்த கிராமிய தோட்டம் | 25,000.00 |
| மாணவர் வீட்டுத் தோட்ட அமைப்பு | 1ம் பரிசு<br>2ம் பரிசு<br>3ம் பரிசு | 10,000.00<br>7,000.00<br>5,000.00 | மாகாண மட்டத்தில் சிறந்த கிராமிய தோட்டம் | 15,000.00 |
| பாடசாலைத் தோட்ட அமைப்பு | 1ம் பரிசு<br>2ம் பரிசு<br>3ம் பரிசு | 12,000.00<br>8,000.00<br>5,000.00 | மாகாண மட்டத்தில் சிறந்த பாடசாலைத் தோட்டம் | 15,000.00 |
| நகர வீட்டுத் தோட்ட அமைப்பு | 1ம் பரிசு<br>2ம் பரிசு<br>3ம் பரிசு | 8,000.00<br>5,000.00<br>3,000.00 | மாகாண மட்டத்தில் சிறந்த அலுவலக விடுதி தோட்டம் | 15,000.00 |
| அலுவலக வளாக தோட்ட அமைப்பு | 1ம் பரிசு<br>2ம் பரிசு<br>3ம் பரிசு | 15,000.00<br>10,000.00<br>8,000.00 | மாகாண மட்டத்தில் சிறந்த அலுவலகவளாக தோட்டம் | 20,000.00 |

போட்டிக்கான நிபந்தனைகளை கீழ்க்காணும் இடங்களில் பார்வையிட முடியும் .1. கமநல சேவை நிலையங்கள் 2.பிரதேச செயலகங்கள் 3. வலயக் கல்வித் திணைக்களங்கள்

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை அவ்வப் பிரதேச விவசாயப் போதனாசி ரியர் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். போட்டியில் பங்குகொள்ள விரும்பும் செய்கையாளர்கள் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் அவ்வப் பிரதேச விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக நேரிலோ/ தபாலிலோ அனுப்பப்பட வேண்டும். (அ)

## நூல், இறுவட்டு வெளியீட்டுவிழா

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி நுண்கலை மன்றம் நடாத்தும் 'பரத நாட்டியம்' செய்முறை விளக்க இறுவட்டு, செய்முறை தாள விளக்க நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர்(நடனம்) 'கலாகீர்த்தி' திருமதி சாந்தினி சிவனேச னும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன்நுண் கலைப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத் துறைத்தலைவர் திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளீதரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

## வெள்ளவத்தை பொலிஸ் மக்கள் பிரிவில் தமிழில் முறைப்பாடு செய்ய முடியும்

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பிராந்தியத்திற்கான பொலிஸ் பொது மக்கள் பிரிவில் தமிழ் மக்கள் தமது மொழியிலேயே முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம்.கருணாரட்ன தெரிவித்தார்.

ஆள்மிரட்டல், கப்பம் கோரல், கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி பொலிஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு குறித்து இலங்கைப் பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நாடு முழுவதிலும் பொலிஸ் மக்கள் பிரிவு என்ற செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் செயற்பாடுகள், திட்டங்கள் குறித்து வெள்ளவத்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது மக்களுக்கு விளக்கும் கூட்டம் 14ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய கருணாரட்ன மேலும் கூறுகையில், இன்று இலங்கையின் பொலிஸ் சேவைக்கு 140 வருடங்கள் ஆகின்றன.

ஆங்கிலேய ஏகாதிபத்திய காலத்தின் போது பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருந்தது. அந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையிலேயே இன்று பொலிஸ் மக்கள் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் மக்கள் பிரிவு எனும் போது பொலிஸாரும் மக்களும் இணைந்திருக்க வேண்டும். அப்போதுதான் இரு தரப்புக்குள்ளும் ஒரு அந்நியோன்னியம் ஏற்படும். இதன்மூலமாக நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்.

எமது தாய் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால் பொதுமக்களும் பொலிஸாரும் திறந்த மனதுடன்செயற்படவேண்டும். தான் நினைத்தவாறு பொலி ஸார் நடந்துகொள்ளவும் முடியாது. அதே வேளை ஏனோ தானே என்ற நிலையில் பொதுமக்களும் இருந்துவிடலாகாது.

வெள்ளவத்தைப் பகுதியில் அநேகமாக தமிழ் மக்களே வாழ்கின்றனர். நாம் அனைவரும் சகோதரமனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.

ஒரு மனிதனுக்கு கைகளில் 5 விரல்கள் இருக்கவேண்டியது அவசியம். அதில் ஒன்றுக்கு காயம் ஏற்பட்டால் சிகிச்சையளிக்க முடியும். ஆனால் அந்த விரல் அழுகி அடுத்த விரலுக்கும் நாசம் செய்யுமாக இருந்தால் அதனை அப்புறப்படுத்துவதைத் தவிர வேறுவழியில்லை.

அதேபோலவே பொலிஸ் மக்கள் பிரிவும் செயற்படும். துப்பாக்கியை கையில் ஏந்தி பொதுமக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் எவராக இருந் தாலும் கொள்ளை, கொலை,ஆள் மிரட்டல் போன்ற குற்றச்செயல்கள்ில் ஈடுபடும் எந்த வர்க்கத்தினர்களாக இருந்தாலும் அவர்கள் தயவு தாட்சண்யமின்றி தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகவுள்ளது. பொலிஸாரின் நடவடிக்கைகளில் பொது மக்களுக்கு சந்தேகம் இருந்தாலும் அல்லது பொது மக்கள் சேவையிலிருந்து பொலிஸார் விலகிச் சென்றாலும் அது குறித்து பொதுமக்கள் பொலிஸ் மக்கள் பிரிவில் தயங்காமல் பயமில்லாமல் முறைப்பாடு செய்யமுடியும்.

இதற்கு மொழி ஒரு பிரச்சினை இல்லை. இந்தப் பிரிவில் மூன்று பாஷைகளையும் பேசக்கூடிய பொலிஸ் அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கும் ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே சுதந்திரமான இலங்கையில் எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றார்.

இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேல் மாகாண அமைப்பாளர் மஹிந்த திசநாயக்க, ஜனாதி பதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் பல பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். (அ-5)

## தொழில் பயிற்சிநெறி கண்காட்சி

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவு நடாத்தும் மனை முகாமைத்துவ 'தொழில் பயிற்சிநெறிக் கண்காட்சி' கல்லூரியில் நாளையும் நாளை மறுநாளும் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும்.

இதன் ஆரம்ப நிகழ்வு கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமாரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர், கரவெட்டி அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்தந்தை சி.ஆனந்தக்குமார், வடமராட்சி முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப் பாளர் த.தவேந்திரராசா, முறைசாராக் கல்விப் பிரிவு செயற்றிட்ட அலுவலர் வே. அம்பிகைபாகன், கரவெட்டி நெல்லியடி கிழக்கு கிராம சேவையாளர் சி.குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

# வரவு - செலவு திட்டம்- 2008

# வரிவிதிப்பு மாற்றங்கள்: ஓர் ஆய்வு

1) குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள்

✱ அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனங்களுக்கான கொடையின் கழிப்பனவுக்கான தகைமைக் கொடுப்பனவுகள், வரி மதிப்பிடுதற்குரிய வருமானத்தின் ஐந்தில் ஒரு பங்கு அல்லது 500,000 ரூபா தொகை ஆகியவற்றில் குறைந்த தொகைக்கு மட்டுப்படுத்தப்படும்.

✱ இலங்கையில் வேலைக்கமர்த்தப்பட்ட இலங்கைப் பிரஜையல்லாதவர்களுக்கான வரி விதிப்பானது இலங்கைப் பிரஜைகளைப் போன்றே விதிக்கப்படும்.



✱ கப்பல்கள் தொடர்பான தேய்வுப் பெறுமதிக் கொடுப்பனவு (**Depreciation Allowance**) அங்கீகாரம், கப்பல் உரிமை யாளர்களுக்கு மாத்திரம் அனுமதிக்கப்படும்.

✱ வாடகை அல்லது குத்தகை மீதான செலவுகள் பிரயாணச் செலவுகளாகக் கருதப் படமாட்டாது.

✱ தகைமை ஏற்றுமதிகள் மீதான வரி 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் ஆகக் குறைக்கப் படும்.

2. பெறுமதி சேர்வரி

2.1 விலக்களிப்புக்கள்

✱ 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச்சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், சேவைகளின் வழங்கல்கள் 01.01.2008 இலிருந்து பெறுமதி சேர்வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

✱ கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் நிதிச் சேவைகளுக்கும் விலக்களிக்கப்படும்.

✱ இனம் காணப்பட்ட சில அரச செயற்றிட்டங்களுக்கும் விலக்களிக்கப்படும்.

✱ முதலீட்டு சபையுடன் உடன்படிக்கைகைச் சாத்திட்ட மருத்துவ நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் மருத்துவ, நலக்கவனிப்புப் பணிகளின் வழங்கல் பெறுமதி சேர்வரியிலிருந்து விலக்களிப்படும். இச் செயற்றிட்டங்களின் மொத்தச் செலவு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 10 மில்லியனைவிடக் குறைவாக இருக்கக்கூடாது.

✱ உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட களிமண் கூரை ஓடுகள், பதனிடப்படாத மரக்கறிகள் மற்றும் பழங்கள், பதனிடப்படாத மீன் உற்பத்திகள் மற்றும் கிடுகுகளின் வழங்கல்கள் விலக்களிக்கப்படும்.

✱ கிழக்கு மாகாணத்தில் நிறுவப்படவுள்ள புதிய தொழில் முயற்சியின் பயன்பாட்டுக்காக இனம்காணப்பட்ட பொறி மற்றும் கருவிகளின் இறக்குமதிகளுக்கும் 01.01.2008 இலிருந்து இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

✱ 01.01.2008 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பாலில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட பால் உற்பத்திகள், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்ட அரிசி உற்பத்திகள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி மற்றும் புடைவைக்கான நூலின் இறக்குமதிக்கும் பெறுமதி சேர்வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

✱ 01.01.2004 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட இறாலுக்கும் விலக்களிக்கப்படும்.

✱ 17.07.2007 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இரசாயன நப்தாவின் வழங்கல் மற்றும் வானூர்தி அல்லது வானூர் உதிரிப்பாகங்களின் இறக்குமதிகளுக்கும் விலக்களிக்கப்படும்.

*2.2 குறைக்கப்பட்ட பெறுமதி சேர்வரிவீதங்கள் (15 சதவீதத்திலிருந்து 5 சதவீதம்)*

✱ 05.06.2007 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பருப்பு மற்றும் பச்சைக் கடலை என்பவற்றின் இறக்குமதிகளுக்கான பெறுமதி சேர்வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

✱ 01.01.2008 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோல் மீதான பெறுமதி சேர்வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

✱ திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒப்புதலுடன் 01.01.2008 இன் பின்னர் இறக்குமதி செய்யப்படும் உபகரணங்கள் (**HS No.** 8539.29, 8545.19.01) மீதானவரியும் 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படும்.

*2.3 வரியைப் பின்போடும் வசதி*

நீண்ட கால அபவிருத்தி செயற்றிட்டத்தில் பயன்படுத் தப்படுகின்ற பொறி, கருவிகளின் தற்காலிக இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க தற்போதைய 12 மாத பிற்போடும் வசதி செயற்றிட்டம்பூர்த்தி செய்யப்படும்வரை நீடிக்கப்படும்.

*2.4 உள்ளீட்டு வரிக்கான கோரல்கள்:*

✱ வரிப் பற்றுச்சீட்டு (**Tax Invoice**) திகதியிட்ட நாளிலிருந்து 12 மாதங்களுக்குள் உள்ளீட்டு வரிக்கான கோரல்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படும்.

✱ விலக்களிக்கப்பட்ட முயற்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களுக்கான உள்ளீட்டு வரி கோரல்கள் அனுமதிக் கப்படாவிட்டாலும் தெரிவு செய்யப்பட்ட பெறுமதி சேர்வரியிலிருந்து விலக்குப்பெற்ற அரசசெயற்றிட்டங்களின் சேவைகளை வழங்குனர்களுக்கு உள்ளீட்டு வரியாக அனுமதிக்கப்படும்.

*2.5 பெறுமதிசேர் முற்பண வரி*

*பெறுமதி* சேர்வரியின் நிறுத்தி வைத்தல் வரி (**With holding VAT**) பெறுமதி சேர் முற்பண வரியாக (**VAT Advanced Tax**) பெயர் மாற்றம் செய்யப்படும்.

*3. பொருளாதார சேவைக் கட்டணம்*

01.04.2008 இலிருந்து பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

✱ குடிவகை மற்றும் மோட்டார் வாகனங்கள் மீதான பொருளாதார சேவைக் கட்டணம் 0.5 சதவீத்திலிருந்து ஒரு சதவீதமாக அதிகரிக்கப்படும்.

✱ ஏற்றுமதி வருவாயை உழைக்கும் எந்தவொரு வியாபாரத்திற்கும் செலுத்தத்தக்க பொருளாதார சேவைக் கட்டணம் 0.25 சதவீதத்தை விஞ்சுதலாகாது.

✱ தற்போது பங்குடைமை மீது நடைமுறையிலிருக்கும் பொருளாதார சேவைக் கட்டணமான 0.5 சதவீதமாக நீக்கப்படுவதுடன் புதிய வரி வீதமானது வியாபாரத்தின் தன்மைகளுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

✱ கொள்வனவு நிலையங்களூடாக (**Buying Office**) ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படும் போது இக்கட்டணம் 0.1 சதவீதமாக இருக்கும்.

✱ பொருளாதார சேவைக் கட்டண நோக்கத் திற்காக வெளிநாட்டு செலாவணியற்ற (**NFE Basis**) அடிப்படையில் இரத்தினக்கற்கள் இறக்குமதி செய்யப்பட்டு பின்பு வெட்டி பட்டை தீட்டி ஏற்றுமதி செய்யும்சந்தர்ப்பங்களில் புரள்வு மற்றும் பிரயோகிக்கத்தக்க வீதம்:

1) மொத்தப் பிரள்வில் (**FOB**) 0.25 சதவீதம் அல்லது

2) இரத்தினக்கற்களின் இறக்குமதிச் செலவைக் (**cif**) ஐக் கழித்து மொத்த ஏற்றுமதிப் பெறுமானத்தில் (**FOB**) எவ்வித விலக்கெல்லையுமின்றி ஒரு சதவீதமாக அறவிடப்படும்.

*4. பற்றுவரி*

பின்வரும் கொடுக்கல் வாங் கல்களுக்கு பற்று வரி (**Debit Tax**) லிருந்து விலக்களிக்கப் படும்.

✱ கூட்டுறவுச்சங்கம் அல்லது கிராமிய வங்கியால் பேணப்படும் எந்தவொரு நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்குகளுக்கும் இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

✱ "எங்களுக்காக நாம்" நிதியத்தில் பேணப்படும் கணக்குகளுக்கும் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

✱ பாடசாலை மாணவர்களுக்குமதிய உணவு வழங்குவதற்கு பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட பணத்திற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கங்களால் பேணப்படும் கணக்குகளும் விலக்குப்பெறும்.

*5. சமூகப் பொறுப்பாண்மை தீர்வை*

✱ கம்பனிகள் வருமான வரியின் மீது அறவிடப்பட்ட சமூகபொறுப்பாண்மைதீர்வை (**Social Responsibility Levy**) 01.04.2008 தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதுடன் தனிப்பட்டவர்கள் மீதானவருமானவரி மீதான இந்த விதிப்பனவு நீக்கப்படும்.

✱ இவ்வரி வீதம் 1.0 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

✱ வருமான வரிதவிர்ந்த ஏனைய வரிகள் மீதான இத்தீர்வை திருத்தங்கள் 01.01.2008 இலிருந்து நடைமுறைக்கு வரும்.

*6. சுற்றாடல் பாதுகாப்பு தீர்வை*

சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு தீர்வை (**Environment Conservation Levy**) என்ற புதிய வரியொன்று இவ்வரவு செலவுத் திட்டத்தின் முன் மொழியப்பட்டுள்ளது. மாதாந்தம் 20 ரூபாவை தீர்வையாகச் செலுத்துவதற்கு பின்வரும் தகுதி விதி திருப்தி செய்யப்படுதல் வேண்டும்.

1) ஓர் நிரந்தர வீடு

2) ஓர் வாகனத்தின் உடைமை

3) தொலைபேசி மற்றும்

4) மின்சார வசதிகளைக் கொண்டிருத்தல்

முடிவுரை இவ்வரவு செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள வரி தொடர்பான மாற்றங்கள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளமை இலங்கையின் வரிக் கொள்கையின் மேம்பாட்டைக் காட்டுகின்றது.

**பாலசுந்தரம் சிவாஜி**
B.A.Hons(Econ) M.A. (Econ)
MBA (Finance)
**பிரதி ஆணையாளர்,**
**உள்நாட்டு இறைவரித்திணைக்களம்.**

எடுத்துக்காட்டாக கிழக்கின் உதயம் செயற்றிட் டத்திற்காக பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதைக் கோடிட்டுக்காட்டலாம்.

இதற்கு மேலதிகமாக நலிவடைந்த நிலையில் உள்ள கூட்டுறவுத் துறைக்கு வருமான வரி, பெறுமதி சேர்வரி தொடர்பில் பல நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதால் கூட்டுறவுத் துறை தனியார்துறையுடன் ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இவற்றைத்தவிர "எமக்காக நாம்" நிதியம், சுற்றாடல் பாதுகாப்பு, பிராந்திய அபிவிருத்தி ஆகியவையும் வரி விதிப்புக் கொள்கை மூலம் மேம்படுத்த யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. எதிர்பார்த்த குறிக்கோள்களின் வெற்றியானது சிறந்த வரி நிர்வாகம், பொது மக்களினதும் வர்த்தகசமூகத்தினதும் ஒத்துழைப்பிலும் தங்கியிருக்கும் என்பது மிகையாகாது. *(முற்றும்)*

# இலங்கையில் அமைதி திரும்ப விரதமிருக்கும் பெண் பக்தர்கள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே உள்நாட்டு போர் முடிந்து இலங்கையில் அமைதி திரும்ப வேண்டி சஷ்டி விரதம் இருப்பதாக திருச்செந்தூர் வந்துள்ள லண்டன் பெண் பக்தர்கள் தெரிவித்துள்ளனர்.

திருச்செந்தூரில் வெளிநாட்டு பக்தர்கள் சஷ்டி விரதம் இருந்து வருகின்றனர். இது குறித்து அவர்கள் கூறியதாவது,

திருச்செந்தூர் முருகனுக்கு சஷ்டி விரதம் இருந்தால் மன அமைதியும் நிம்மதியும் கிடைக்கிறது. இலங்கையில் தற்போது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையே நடக்கும் உள்நாட்டுப்போர் முடிந்து விரைவில் அமைதி திரும்ப வேண்டும். உலகமெங்கும் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக இம்முறை நாங்கள் சஷ்டி விரதம் இருக்கிறோம் என அவர்கள் கூறினர். (அ-5)



வடமராட்சியில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை நிலைநாட்டிய கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவி செல்வி துஷிதா மனோகரனை பாராட்டி நடத்தப்பட்ட விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மக்கள் வங்கியின் பரிசில்களை வழங்கிய வங்கி முகாமையாளர் எஸ்.சிவஞானசுந்தரம்பிள்ளை பரிசில்களைப் பெற்றுக்கொண்ட செல்வி துஷிதா, அதிபர், ஆசிரியைகள் வங்கி அதிகாரிகளுடன் காணப்படுகிறார். (பருத்தித்துறை நிருபர்)

# புலிகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் அரசுக்கு பிரிட்டன் அழுத்தம் கொடுக்கிறது

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்ற வகையில் செயற்படுகின்ற பிரித்தானியா இலங்கை அரசாங்கத்தின் மீது அநாவசியமான முறையில் அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு முயற்சிக்கின்றது. என்று ஜே.வி.பி எம்.பியான பிமல் ரட்ணாயக்க சபையில் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன் வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

பிரிட்டனில் 2005ஆம் ஆண்டு இடம் பெற்ற குண்டு வெடிப்பிற்கு பின்னர் அங்கிருந்தவர்களில் வெள்ளையர்கள் அல்லாத சகலரும் துன்புறுத்தப்பட்டனர். அத்தோடு பிரேஸில் நாட்டைச்சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அத்தோடு அரபியர்களும் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்களும் பயங்கரவாதிகளென குற்றம் சாட்டப்பட்டு இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில் இலங்கையில் உள்ள பயங்கரவாத இயக்கமான விடுதலைப்புலிகளுக்கு சார்பான நடவடிக்கைகளை பிரிட்டன் மேற்கொண்டு வருகிறது. அதற்காக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் என சொல்லப்படுகின்ற தமிழ்ச்செல்வனின் மறைவிற்காக அஞ்சலிக் கூட்டங்களை நடத்த இடமளிக்கின்றது.

புலிகள் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதை பிரித்தானியா தெரிந்து வைத்துக்கொண்டும் தமிழ்ச்செல்வனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு இடம்வழங்கியது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு எமது நாட்டுப்பிரச்சினைகள் தொடர்பாக பிரிட்டன் பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சூழ்ச்சித் திட்டத்தை கண்டிக்க வேண்டும் என்றார். (அ-5)

# மகரஜோதி மண்டல விரத மஹோற்சவ பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் அருள் மிகு யாழ் சபரீச ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த மகரஜோதி மண்டல விரத மகோற்சவ பெருவிழா சபரி மலை யாத்திரைக் குழு 2007 நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 7.மணிக்கு புனித மாலை அணிதலுடன் ஆரம்பமாகும்.

கொடியேற்றம் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகும். 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதி 4 மணிக்கு மகரஜோதீ விழா இடம் பெறும். (அ-6)

பொய்யனுக்குக் கிடைக்கும் தண்டனை- அவன் உண்மையைச் சொல்லும் போதும், அதை யாரும் நம்பாதிருத்தல்.

- இஸ்ரேல்

வலம்புரி

# அங்கே துடிப்பது நமது உயிரென உணருங்கள் குறுகிய வட்டத்தில் இருந்து வெளியே வாருங்கள்

குமுதம் ஆசிரியர் தலையங்கத்தில் வேண்டுகோள்

இலங்கையில் துடிப்பது நமது உயிர்... தமிழ் உயிர் என்பதை அனைவரும் உணர வேண்டும் என்று தமிழகத்திலிருந்து வெளிவரும் குமுதம் வார இதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

குமுதம் வார இதழின் ஆசிரியர் தலையங்கம்,

போர் என்ற அறிவிப்பு மட்டும்தான் வெளிப்படையாக இல்லை. ஆனால் புகை மண்டலம் எழுந்து அடங்குகிறது. உயிர்கள் பொசுங்கும் நெடியடிக்கிறது. அநுராதபுரத்தில் ஒக்ரோபர் மாதத்தில் நடந்த தாக்குதலின் போது உயிர் நீத்த விடுதலைப் புலிகளின் சடலங்களைக் கூட அகௌரவப்படுத்தி அவர்களுடைய ஆடைகளை அப்புறப்படுத்தி நிர்வாணமாக்கிய கொடுரத்தை இலங்கை இராணுவம் செய்ததைக் கண்ட தமிழ் நெஞ்சங்கள் பதறின. சில நாட்களுக்குள் அதிகாலை வேளையில் வான் வழித்தாக்குதல் நடத்தி தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வனையும் உடனிருந்த தளபதிகள் ஐந்து பேரையும் சமாதானப் பகுதியில் படுகொலை செய்திருக்கிறது இலங்கை இராணுவம்.

தமிழ்ச்செல்வனின் உயிரிழப்பை அமைதியின் மீது விழுந்த இடியாக அறிவித்திருக்கிறது. புலிகள் இயக்கம் இதனைத் தொடர்ந்து இரு தரப்பிலும் போர் வலுப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன.

சமரச முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்து போர் நீடித்தால் அதிகம் பாதிக்கப்படப்போவது ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்கள் தான். சிக்கல் முற்றினால் அவர்கள் அகதிகளாக புகலிடம் தேடி வரப்போவதும் நம்மிடம்தான்.

இந்திய அரசு இக்கட்டான இந்த நிலையிலாவது அங்கே சமாதானம் உருவாகச் சில நிர்ப்பந்தங்களை உருவாக்க வேண்டும். தமிழக முதல்வர் இரங்கல் தெரிவித்ததைக் கூட உள்ளூர் அரசியலாக்கும் குறுகிய வட்டத்திலிருந்து இங்குள்ள கட்சிகள் வெளிவர வேண்டும்.

ஒன்றே ஒன்றை மட்டும் அனைவரும் உணர்ந்து ஒன்று சேரவேண்டும். அங்கே துடிப்பது நமது உயிர் தமிழ் உயிர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# ஜனாதிபதியின் அதட்டலுக்கு ஜே.வி.பி அடிபணியுமா?

வரவு செலவுத்திட்டத்தை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் மிகத் தீவிரமாக உள்ளன.

இதில் ஜே.வி.பியும் இணைந்து கொண்டு அரச வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்கும் என்ற ஊகங்களை அந்தக் கட்சியும் உறுதி செய்துள்ளது.

ஜே.வி.பி எதிர்த்து வாக்களிக்குமாயின் வரவு செலவுத்திட்டம் தோல்வியடையும் என்பது சர்வ நிச்சயம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் வாசிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் தோற்றுப் போகுமாயின் அது ஜனாதிபதிக்கு ஏற்பட்ட தோல்வியாகவே கருதப்படும்.

எனவே வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசும், அதனைத் தோற்கடிப்பதில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இத்தீவிர செயற்பாட்டினால் எதிர்கட்சியிலிருந்து ஆளுந்தரப்பிற்கும், ஆளுந்தரப்பிலிருந்து எதிர்த்தரப்பிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாவிக்கொள்கின்றனர்.

இலங்கையின் அரசியல் பண்பாட்டைக் கேவலப்படுத்தும் வகையில் இடம்பெறும் கட்சித்தாவல்கள் சமநிலையில் இடம்பெறுவதால் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அதன் வகிபங்கு போதுமானதென அரசு கருதவில்லை.

எனவே இப்போது அரசுக்கு இருக்கக் கூடிய ஒரேவழி, ஜே.வி.பியை எப்பாடுபட்டாவது வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வைப்பது என்றாகிவிட்டது. எனினும் சாம, தான முறைகள் ஏதும் பலனளிக்காத நிலையில் ஜே.வி.பியை வெருட்டி-அதட்டி வாக்களிக்க வைக்க வேண்டும் என்ற முடிபை எடுத்துக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்காதவிடத்து நாடாளுமன்றத்தை கலைத்து விடுவேன் என எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் முப்பத்தொன்பது ஆசனங்களைக் கொண்ட ஜே.வி.பி என்னொரு பொதுத் தேர்தலை சந்தித்தால் முப்பத்தொன்பது ஆசனங்களை மீளப் பெற்றுக் கொள்ளுமா? என்பது கேள்விக்குரியதே.

எனவேநாடாளுமன்றத்தை கலைத்துவிடுவேன் என எச்சரிக்கை செய்தால் அதற்கு ஜே.வி.பி அடிபணிந்து வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும் என்ற நிலையை மையமாக வைத்து ஜனாதிபதி மகிந்த, ஜே.வி.பிக்கு கணை தொடுத்துள்ளார்.

விலையேற்றம், சம்பள அதிகரிப்பின்மை, சமூக நலன் பேணப்படவில்லை என்ற குற்றச் சாட்டுக்களை வரவு செலவுத்திட்டத்தில் இனங்கண்ட ஜே.வி.பி, ஜனாதிபதியின் அதட்டலுக்கு அடிபணியுமா? இல்லையா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# அரசாங்கத்திற்கு நிபந்தனை விதிக்கவில்லை என்கிறார் ஜே.வி.பி., எம்.பி விஜிதஹேரத்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல், யுத்த பொருளாதார கள நிலைகளை ஆராய்ந்தே அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்ற தீர்மானத்தை ஜே.வி.பி. மேற்கொள்ளும். அரசாங்கத்திற்கு ஜே.வி.பி நிபந்தனைகளை விதிக்கவில்லை. நாம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றிக்காட்டுமாறே கோரிக்கை விடுத்துள்ளோம் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக விஜித ஹேரத் எம்.பி மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

வெறுமனே யுத்தத்தை மட்டுமே அளவு கோலாக வைத்து அரசாங்கத்தின் வரவு-செலவு திட்டத்தை ஆதரிக்க ஜே.வி.பி தயாரில்லை. தற்போது நாட்டில் இடம்பெறும் கட்சித் தாவல்கள் பதவிப் பரிமாற்றங்கள் ஊழல் மோசடிகள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு மக்கள் மீதான சுமைகள் தொடர்பாக கட்சியின் அரசியல் சபையில் ஆழமாக ஆராய்ந்தே தீர்மானத்தை மேற்கொள்வோம்.

அத்தோடு தேர்தலொன்று வருமா அல்லது வரவு செலவுத் திட்டம் தோல்வி கண்டால் அமையப் போகும் அரசாங்கம் பலருடையதாக இருக்கும்? இவ்வாறான புதிய அரசாங்கத்தால் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமா? எவ்வாறான தொரு அரசாங்கம் அமைய வேண்டும் போன்ற விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டே இறுதித் தீர் மானம் எடுக்கப்படும்.



எதிர்வரும் 18ஆம் திகதி இரவு இடம்பெறும் கட்சியின் அரசியல் சபையில் வரவு செலவு திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

அதேவேளை யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத் துச் செய்யவேண்டும் சர்வகட்சி மாநாடு கலைக்கப்படவேண்டும் ஐ.நா. உட்பட சர்வதேச நாடு களின் அழுத்தங்களை தடுத்து நிறுத்த வேண்டும் .நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு ஜே.வி.பி.நிபந்தனைகளை விதிக்கவில்லை.

இவ்விடயங்களை நடைமுறை சாத்தியமான விதத்தில் செய்து காட்ட வேண்டுமென்றே தெரிவித்தோம். ஆனால் பத்திரிகைகளில் நிபந்தனைகளென செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்தோடு இவற்றை 6 நாட்களுக்குள் செய்து காட்ட முடியாது எனவே வரவு செலவுத் திட்டத்தையும் மேற்கண்ட கோரிக்கைகளையும் முடிச்சு போட வேண்டாம். (அ-5)

# சர்வகட்சி குழுவை கலைக்குமாறு ஜே.வி.பி கோருவது தேசத்துரோக நடவடிக்கை

## அரசு அடிபணியக்கூடாது என்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினை கலைக்க வேண்டும் என்ற ஜே.வி.பியின் கோரிக்கை தேசத்துரோகமானது இதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒரு போதும் அடிபணியக் கூடாது என்று குழுவின் தலை வரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி குழுவைக் கலைப்பதுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் ரத்து செய்ய வேண்டு மென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அரசாங்கத்திடம் கோரியுள்ளமை குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியதாவது,

நாட்டில் புரையோடிப் போயுள்ள தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்து அரசியல் கட்சிகளை யும் உள்ளடக்கிய சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவையும் சர்வகட்சி ஆலோசனைக் குழுவையும் ஏற்படுத்தினார். அதிலிருந்து ஜே.வி.பி வெளியேறியது கவலைக்குரியது. அப்போது மீண்டும் இணையுமாறு அழைப்பு விடுத்தேன் இணையவில்லை.

தற்போது இவையனைத்தையும் கலைக்க வேண்டுமெனக் கோருவது தேசத்துரோகமாகும். நாட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டு மென்ற அக்கறையில்லாத கோரிக்கையாகும்.

வரவு-செலவு திட்டத்தை ஆயுதமாக பயன்படுத்தி அரசாங்கத்தின் கழுத்தை நெரிக்கும் ஈனச் செயலாகும்.

எனவே வரவு-செலவுத்திட்டச் சவாலை அரசாங்கம் எதிர் நோக்க வேண்டும் அதை விடுத்து ஜே.வி.பி க்கு அடிபணியக் கூடாது. (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை 43

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

ஒருவனுடைய வாழ்க்கை நலமாக அமையவேண்டுமானால் அவனுக்கு ஒரு நலமான துணை வேண்டும். வள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என ஓர் அதிகாரம் அமைத்துப் 10 குறளில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். குறளுக்கு உரை எழுதிய மணக்குடவர் வாழ்க்கைத்துணை நலமாவது வாழ்க்கைத்துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதல் என விளக்கியுள்ளார். கருவில் உருவாகிய நாள் தொட்டுத் திருமணமாகும் வரை மனிதனுக்கு தாயே உற்ற துணையாக இருக்கின்றாள் திருமணமான பின்னர் மனை வியே அவனுடைய இல் வாழ்க்கைக்கு நலமான துணையாக இருக்கி றாள் தாய்க்குப் பின்தாரம் என்ற முதுமொழியும் இதனை விளக்கவே எழுந்துள்ளது.

மனித வாழ்க்கையில் நான்கு கடமைகள் சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டியவை துறவிகளைப் பேணுதல், விருந்தினரைப் பேணல், சுற்றம் தழுவி நடத்தல், வருவாய்க்குத்தக்க வாழ்க்கை நடத்தல் என அவற்றை முன்னோர் வகுத்துள்ளனர். இக்கடமைகளைச் செல்வனே நிறைவேற்றும் பொறுப்பு வாழக்கைத்துணை நலமான பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது ஒரு கற்பு நிலையாகவும் பேணப்பட்டுள்ளது. வறுமைக்காலத்தும் மனம் தளராது தன் கடமைகளை நிறைவேற்றுபவளே மனைமாட்சி உடையவளாகப் போற்றப்பட்டாள். வள்ளுவர் குறள் இதனை வருமாறு கூறுகிறது.

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"** (குறள் 51)

வாழ்க்கையில் வறுமை வந்தபோதும் இல்லறக் கடமைகளை நிறைவேற்றப்பெண்தான் துணை நிற்க வல்லவள். ஒரு குடம் நீரில் உணவு சமைத்து உண்ணும் வறுமை நிலையை அடைந்த போதும் கடல்போல் உறவினர் வந்தபோதும் கலங்காது ஏற்றபடி எல்லோரையும் எதிர்கொண்டு வாழும் இயல்புடைய பெண்ணே பெருங்கற்புடையவள். மென்மையான மொழிகளைப் பேசும் இயல்புடைய மனை மாட்சியுடைய பெண் எத்தகைய இடர்வந்தபோதும் குடும்பக் கடமைகளை நிறைவேற்ற உழைக்கும் இயல்புடையவள்.


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இதனை நாலடியார் எடுத்துரைத்துள்ளது.

நிர்வாகத்திறனும் திட்டமிடப்பட்ட செயற்பாடும் கொண்ட பெண்களால் இல் வாழ்க்கை இன்பமான வாழ்க்கையாக அமையும். ஏற்ற பொறுப்பினை எப்போதும் எந்த நிலை ஏற்பட்ட போதும் மனந் தளராமல் சிறப்பாகப் பேணும் பெருங்குணவியல்பே கற்பாகும் இக் கற்புநிலை பெண்ணிடம் தனித்துவமாக இணைந்திருக்க வேண்டும் . அப்போது தான் பெண் தன்னையும் காத்து, தன்னைக் கொண்டவனையும் பேணி சோர்வடையாமல் சிறந்ததொரு வாழ்க்கைத் துணை நலமாக ஆணுக்குத்தாய்க்குப் பின்தாரமாக விளங்க முடியும்.

**"குட நீரட்டு உண்ணும் இடுக்கண் பொழுதும்**
**கடல் நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்**
**கடல் நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள்"**

(நாலடி:382)



# மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் இல்லை

## பான் கீ மூன் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை அரசு மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் பான் கீ மூனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில், மனித உரிமை மீறலைக் கட்டுப்படுத்தும் இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களை விசாரிக்கவென மகிந்த அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு உரிய முறையில் பூரணமாகச் செயலாற்றவில்லை எனவும் திருமலையில் இலங்கைப் படையால் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் மனிதநேயப் பணியாளர்கள் 17 பேர் உட்பட பல சம்பவங்களுக்கு உரிய தீர்ப்பு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2006 ஆண்டு ஒகஸ்ட் மாதம் திருகோணமலை மூதூரில் பிரான்ஸின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் உள்ளூர் மனிதநேயப் பணியாளர்கள் 17 பேர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை அமெ.முடக்கியது

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உடைமைகளை முடக்க முடிபெடுத்துள்ளதாக அமெரிக்கா நேற்று அறிவித்துள்ளது.

இந்த அமைப்பு, அமெரிக்காவினால் 1997 ஆம் ஆண்டு முதல் தடைசெய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதியாதரவு மற்றும் இதர கொள்வனவு செய்வதில் ஈடுபட்டதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அமெரிக்காவிலுள்ள சொத்துக்களை முடக்குவதாக அமெரிக்க திறைசேரி அறிவித்ததாகக் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (ச-5)

# மன்னாரில்...

தளத்துக்குச் சென்றுள்ளன. நேற்று இரவு வரை தரையிறங்கிய உலங்கு வானூர்தி மேலெழவில்லை எனத் தெரிவிக் கப்பட்டது.

அப் பகுதி படையினரின் முற்றுகையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. படைஅதிகாரிகள் குழு ஒன்றையே அந்த உலங்கு வானூர்திகள் அணி கொண்டு சென்றிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# வர்த்தகர்களிடம் கப்பம் பெற சில நபர்கள் முயற்சிக்கின்றனர்

## அறிவிக்கக் கோருகின்றது இராணுவம்

யாழ்.பிரதேசத்தில் தனியார் வர்த்தகர்களிடமிருந்து சிலநபர்கள் கப்பம் பெற்று வருவதாகப் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகப் பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தற்போது பாதுகாப்புப் படையினர் அந்நபர்களை கைது செய்வதற்குத் தேவையான குழுக்களை நியமித்துள்ளனர் எனவும் இவ்வாறு தொலைபேசி மூலம் தந்த தகவல்களின்படி பல சந்தர்ப்பங்களில் சில நபர்களை கைது செய்வதற்கு உதவியாகவிருந்தது எனவும் அவ்வாறு அப்பாவிப் பொதுமக்களிடம் கப்பம் பெறுவோருக்குச் சட்டத்தின் மூலம் கடும் தண்டனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் படைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பிரதேசத்தில் கப்பம் பெற முயற்சித்தால் 021 222 2267, 021 222 3398 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கும் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் கப்பம் பெற முயற்சித்தால் 021 226 3145, 021 226 3370 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கும் தென்மராட்சி தென்பகுதியில் கப்பம் பெற முயற்சித்தால் 021 226 3146, 0112 4373, 021 226 4619 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு அறியத் தருமாறு இராணுவம் கோரியுள்ளது. (எ)

# அரசாங்கத்துடன் இணையும்...

நாடாளுமன்ற உறுப்பினரான நான் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இரு தடவைகள் யாழ்.மாவட்டத்திலும் மூன்றாவது தடவையாக கொழும்பு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் என்னைத் தெரிவு செய்துள்ளனர்.

அதனைவிட எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த நாள், எனது அரசியல் பயணங்களை ஐக்கிய தேசியக் கட்சி ஊடாகவே மேற்கொள்ளுவேன்.

நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றுச் சந்தித்ததாகச் செய்திகள் வெளியாகின. அது உண்மைக்குப் புறம்பானது. எவ்வாறான சந்திப்புக்களிலும் நான் ஈடுபடவில்லை என்றார்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படாத வரவு-செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு அளித்தாலும் தான் அதற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாகவும் மகேஸ்வரன் எம்.பி. மேலும் கூறினார். (ச)

# முஸ்லிம்...

மாவடிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கடந்த 30 ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஏறாவூரைச் சேர்ந்த மற்றுமொரு வர்த்தகரும் கடத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் பதற்றம் நிலவி வருகின்றது. வர்த்தக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ச-5)

# அரசாங்கத்துக்கான ...

வரவு-செலவுத் திட்டத்தில் குறைபாடுகள் ஏராளம் உள்ளன. ஆனால் பயங்கரவாதத்தைத் தோற்கடித்துப் புலிகளை அழிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு அரசுக்கான முழுமையான ஆதரவையும் தொடர்ந்து வழங்குவதே எமது தற்போதைய முடிபு என்றார் அவர்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை ஆதரிக்கும் ஹெலஉறுமயவின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிரணிக்குத் தாவவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெலஉறுமயவின் அக்மிமன தயாரட்ண தேரர், அபேலெக்கே புன்னானந்த தேரர், அளவேவ நந்தலோக தேரர், உதவத்த நந்ததேரர் ஆகியோர் எதிரணிக்குத் தாவக் கூடும் என்று கூறப்படுகின்றது.

வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னதாக சிறப்பு அமைச்சரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தை நடத்த மகிந்த ராஜபக்ஷ முடிபு செய்துள்ளார்.

மகிந்த அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு வெற்றி பெறுவது அல்லது மகிந்த அரசாங்கம் நீடிப்பது என்பது தற்போது ஜே.வி.பியின் கைகளில் உள்ளதால் ஜே.வி.பியை உடைக்கவும் மகிந்த ராஜபக்ஷ தீவிரமுனைப்புக் காட்டுவதாகவும் தெரிகின்றது. இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் மகிந்த அரசாங்கம் வெற்றி பெற்றுக் காட்டட்டும் என்றும் சவால் விடுத்துள்ளது. (ச-5)

# நாடாளுமன்றத்தைக் ...

கவிழ்க்கும் வகையில் செயற்படுவதானது நியாயமற்றது எனவும் அதனையும் மீறி இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றினால் தான் வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்குவோம் என்று ஜே.வி.பி. பிடிவாதமாக நிற்குமானால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டுமாயின், நான்கு நிபந்தனைகளை விதித்து அதனை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் நிறைவேற்ற வேண்டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தியிருந்தது.

❖ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை உடன் இரத்துச் செய்வதாக அறிவிக்க வேண்டும்.

❖ இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் குழுவைக் கலைக்க வேண்டும்.

❖ ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதனைத் தடுக்க வேண்டும். அல்லது அத்தகைய பயணங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது.

❖ இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வகையிலும் இறைமைக்கு குந்தகம் ஏற்படாத வகையிலும் அரசாங்கம் செயற்படுமென உறுதியளிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை நிராகரிக்கும் வகையில் மகிந்த ராஜபக்ஷ கடிதம் அனுப்பியிருப்பதால் ஜே.வி.பி. வட்டாரங்கள் இந்த விடயத்தில் விசனம் அடைந்திருப்பதாகவும் எனினும் அரசாங்கம் கவிழ்ந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதனை ஜே.வி.பி. விரும்பவில்லை என்றும் தெரியவருகின்றது.

எனினும் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவும் அதேநேரம் அரசைக் கவிழ விடாது பாதுகாக்கவும் ஜே.வி.பி. முடிபு செய்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (ச-5)

# சி.சு.கட்சி மத்திய குழுவிலிருந்து...

கட்சிக்குள் கொலைகாரர்களை யும் பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளை யும் அவர் தற்போது இணைத்து வருகின்றார். இதற்கு கட்சி மத்திய குழுவிடம் அவர் அனு மதி கோரவில்லை. கட்சித் தலைவர் என்ற அடிப்படையிலும் ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தையும் வைத்து அவர் கட்சிக்குள் இப்படியான மோசமானவர்களைக் கொண்டு வர முயல்கின்றார்.

அவர்களைக் கட்சிக்குள் இணைப்பதாயின் கட்சி மத்திய குழுவுடன் கலந்துரையாடியிருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல் தன் விருப்பப்படி செயற்படுவது கட்சியைப் பாதிக்கும் செயலாகும்.

கட்சியின் மத்திய குழு உறுப்பினர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷ தனது விருப்பத்திற்கு இப்படியானவர்களைக் கட்சிக்குள் சேர்ப்பதனை என்னால் அனுமதிக்க முடியாது.

குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் தற்போது இருந்து கொண்டு எல்லாவற்றிற்கும் தலையாட்டுபவர்கள் போன்று என்னால் செயற்பட முடியாது. இதன் காரணமாகவே கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளேன். எனினும் எதிரணிக்குத் தாவும் திட்டம் என்னிடம் இல்லை. கட்சிக்குள் இருந்தவாறே சுதந்திரமாகச் செயற்படவிரும்புகின்றேன் என்றார் அவர்.

அரசாங்கத்திற்குத் தாவிய மகிந்த ரட்ண திலக்கவும் டிலான் பெரேராவும் நீண்ட நாள் பகையாளிகளாகவேயுள்ளனர். 1997 ஆம் ஆண்டு டிலான் பெரேராவுடன் இரத்தினபுரி வீதியில் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த நாலந்த எல்லாவலவை சுட்டுக் கொலை செய்த சம்பவத்தில் மகிந்த ரட்ண திலக்கவும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கொலை வழக்கில் கண்கண்ட சாட்சியாக இருப்பவர் டிலான் பெரேராதான். இந்தக் கொலை வழக்கு அரசியல் தலையீடுகளால் மூடி மறைக்கப்பட்டாலும் டிலான் பெரேராவும் மகிந்த ரட்ண திலக்கவும் கடும் விரோதிகளாகவேயிருந்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே எதிரணியிலிருந்த மகிந்த ரட்ண திலக்கவை ஆளுந்தரப்புக்குள் மகிந்த ராஜபக்ஷ இணைத்துள்ளார். இதன் காரணமாகவே டிலான் பெரேரா சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார். (ச-5)

# வவுனியா...

மோதலில் பெண் புலிகளின் தலைவி மதுவிழி உள்ளிட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் 24 பேர் காயமடைந்துள்ளதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர். அத்துடன் ஆறு பதுங்குகுழிகளும் சேதமாக்கப்பட்டதாகக் கூறினர்.

விளாத்திக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 12.55 மணியளவில் இடம்பெற்ற மோதலில் புலிகள் தரப்பில் ஐவர் கொல்லப்பட்டுள்ளதாகப் படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்த படையினர், தேடுதலில் ஈடுபட்டதாகவும் கூறினர். (ச-5)

# இலங்கை அரசியலில் பெருங்குழப்பம்...

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயதாஸ ராஜபக்ஷ விலகி எதிரணிக்குத் தாவினார். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மகிந்த ரட்ணதிலக்க, மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து அரசாங்கப் பக்கம் நேற்றுத் தாவினார். தான் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்தான் என்றும் மகிந்த ரட்ணதிலக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ரட்ணதிலக்கவை அரசாங்கத்தில் இணைத்துக் கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதி நீதியமைச்சர் டிலான் பெரேரா சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிலிருந்து விலகுவதாக அறிவித்தார். தமது கட்சியின் 4 நிபந்தனைகளை ஆறு நாள்களில் நிறைவேற்ற வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கெடு விதித்திருந்த நிலையில் அவைகள் நிபந்தனைகள் அல்ல, கோரிக்கைகள் தான் என்று அரசாங்கத்தின் பக்கம் தாம் தாவவுள்ளதை ஜே.வி.பியின் விஜித்த கேரத் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மகிந்தவை ஆதரிக்கும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த 4 பிக்குகள் எதிரணிக்குத் தாவவுள்ளதாக பெயர்களுடன் செய்திகள் வெளியான நிலையில் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர், அரசாங்கத்தையே ஆதரிப்போம் என்றார்.

இந்நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியும் நேற்று மாலை 6 மணிக்கு ஆலோசனை நடத்தியுள்ளது. இ.தொ. கவிலும் மீண்டும் தாவல்கள் இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தி.மகேஸ்வரன் அரசாங்கத்தின் பக்கம் தாவக் கூடும் எனக் கூறப்படுகின்றது. அதேபோல் எதிரணிப் பக்கம் தாவிவிட வேண்டாம் என்று நேற்று மாலை நடைபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸூடனான சந்திப்பின்போது மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து அர்ஜுன ரணதுங்க எதிரணிக்குத் தாவிவிடுவார் என்ற நிலையில் அவருக்கு மீண்டும் விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி கொடுக்கப்படும் என்று மகிந்த ராஜபக்ஷ பேரம் பேசியுள்ளார்.

தென்னிலங்கையில் உச்சபட்ச அரசியல் குழப்ப சூழ்நிலைகள் குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இது தொடர்பில் ஆலோசனை நடத்தவுள்ளனர். (ச-5)

பரீட்சை வினாத்தாள்

தரம் ஒன்று முதல் ஐந்து வரை மூன்றாம் தவணைக்கான வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

நாவலர்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(C-549)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.